# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லல்

**சர்வதேச வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லலுக்கான குறித்தசில விதிகளை ஒன்றாக்குவதற்கான சமவாயத்துக்குப் பயன்கொடுப்பதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரால்*
*2018, ஒகத்து மாதம் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, யூன் மாதம் 29 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ **262 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 51.00** **தபாற் செலவு : ரூபா 25.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ச. வ- ஓ. 35/2012

**சர்வதேச வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லலுக்கான குறித்தசில விதிகளை ஒன்றாக்குவதற்கான சமவாயத்துக்குப் பயன்கொடுப்பதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

முன்னுரை.

சர்வதேச வானூர்தி மூலம் ஏற்றிச்செல்லலுக்கான குறித்தசில விதிகளை ஒன்றாக்குவதற்கான சமவாயம், ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றொன்பதாம் ஆண்டு மே மாதம் இருபத்தெட்டாம் நாளன்று மொன்ட்றீலில் ஆக்கப்பட்டதாதலாலும்:

அத்துடன் மேற்கூறப்பட்ட சமவாயத்துடன் இணங்குவதற்கு இலங்கை உட்கருதுகின்றதாதலாலும்:

அத்துடன் மேற்கூறப்பட்ட சமவாயத்தின்கீழ் இலங்கைக்குள்ள கடப்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கான சட்ட ஏற்பாடுகளைச் செய்வது அவசியமாகவுள்ளதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லல் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், 1999ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் நாளன்று ஆக்கப்பட்டதும், (இதனகத்துப்பின்னர் ''சமவாயம்'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) சர்வதேச வானூர்தி மூலம் ஏற்றிச்செல்லலுக்கான குறித்தசில விதிகளை ஒன்றாக்குவதற்கான சமவாயம் இலங்கை தொடர்பில் எத்தேதியன்று வலுவுக்கு வருகின்றதோ அத்தேதியென அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் சான்றுபடுத்துகின்ற அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*சர்வதேச வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லலுக்கான குறித்தசில விதிகளை ஒன்றாக்கு வதற்கான சமவாயத்தின் ஏற்பாடுகள் இலங்கைக்கு ஏற்புடையன வாதல்.*

**2**. சமவாயத்தின் ஏற்பாடுகளாகவுள்ள, இச்சட்டத்துக்கான I ஆம் அட்டவணையில் அடங்கியுள்ள உறுப்புரைகள், ஏற்றிச் செல்பவர்கள், பயணிகள், அனுப்புநர்கள், ஒப்படை பெறுநர்கள் மற்றும் வேறு ஆட்கள் என்போரின் உரிமைகளுடனும் பொறுப்பு களுடனும் அவை தொடர்புபட்ட அளவுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமையவும், அவ்வேற்றிச்செல்லலைப் புரிகின்ற வானூர்தியின் நாட்டினத்தைப் பொருட்படுத்தாது, சமவாயம் எந்த வானூர்திமூலம் ஏற்றிச்செல்லலுக்கு ஏற்புடையதாகவுள்ளதோ அந்த வானூர்திமூலம் ஏற்றிச்செல்லல் தொடர்பாக இலங்கையில் சட்டவலுவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*ஒதுக்கங்கள் மற்றும் அரச தரப்பினரின் அறிவித்தல்கள்.*

**3**. (1) அமைச்சர், காலத்துக்குக்காலம் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின்மூலம், ஏமவைப்புக்காப்பாளருக்கு வெளிப்படுத்தப்படக்கூடியவாறாக சமவாயத்தின் 57 ஆம் உறுப்புரையின்கீழான ஏதேனும் ஒதுக்கங்களை குறித்துரைக்க லாம்.

(2) அமைச்சர் காலத்துக்குக்காலம் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், சமவாயத்துக்கான அரசுத் திறத்தவர்களின் ஆள்புலன்கள் மற்றும் அத்தகைய அரசுத் திறத்தவர்களினால் செய்யப்பட்ட ஒதுக்கங்கள் அத்துடன் அரசுத் திறத்தவரல்லாத ஆள்புலனினுள் உடன்பட்ட நிறுத்தல் இடங் களையும் அறிவிக்கலாம்.

*நட்டஈட்டிற்கான வழக்கு நடவடிக்கை.*

**4**. ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், நட்டஈட்டிற்கான வழக்கு நடவடிக்கை எதுவும் சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அதில் தரப்பட்டுள்ளவாறான அத்தகைய பொறுப்புகளின் மட்டுப்பாடுகளுக்கும் அமைவாக அன்றி ஏதேனும் ஒப்பந்தம் அல்லது தீங்கியல் அல்லது வேறுவகையாக ஏற்றிச்செல்லுபவர்களுக்கு எதிராக கொண்டுவரப்படுதலாகாது.

*சமவாயத்தைத் திரிபுபடுத்துதல்.*

**5**. (1) இச்சட்டத்துக்கான அட்டவணையின் ஏற்பாடுகள், அதன்கண் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறாக சர்வதேச வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லலாகவிராத அத்தகைய வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லலுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஆயிரத்துதொளாயிரத்து தொண்ணூற்றிரெண்டாம் ஆண்டின் 55 ஆம் இலக்க, வான் செலவு (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் II ஆம் பாகத்திலுள்ளதெதுவும் (வார்சோ – ஹேக் வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லல் சமவாயம்) சமவாயம் ஏற்புடையதாகவுள்ள ஏதேனும் வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லல் தொடர்பில் ஏற்புடையதாதலாகாது.

*வரையறைகளைப் பரிசீலனை செய்தல்.*

**6**. சமவாயத்தின் 24 ஆம் உறுப்புரையின்கீழ் வரையறைகளின் ஏதேனும் பரிசீலனை தொடர்பான ஏதேனும் அறிவிப்பைப் பெற்றதன் மேல், அமைச்சர், காலத்துக்குக்காலம் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், ஏமவைப்புக் காப்பாளரினால் பரிசீலிக்கப்படக்கூடியவாறான பொறுப்பின் வரையறைகளைக் குறித்துரைக்கலாம்.

*முற்பணக் கொடுப்பனவுகள்.*

**7**. பயணிகளுக்கு இறப்பை அல்லது ஊறுபாட்டை விளைவிக்கின்ற வானூர்தி விபத்துக்களின் விடயத்தில், ஏற்றிச் செல்பவர், சமவாயத்தின் 28ஆம் உறுப்புரையினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக முற்பணக் கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும்.

*பொருள் கோடல்.*

**8**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய,-

"அமைச்சர்" என்பது, குடியியல் வான் செலவு என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர் என்று பொருளாகும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**9**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

***அட்டவணை*** (பிரிவு 2)

## *சர்வதேச வானூர்தி மூலம் ஏற்றிச்செல்லலுக்கான குறித்தசில விதிகளை ஒன்றாக்குவதற்கான சமவாயம் (மொன்ட்றீல், 1999, மே 28)*

## அத்தியாயம் I

### பொது ஏற்பாடுகள்

#### உறுப்புரை 1 – ஏற்புடைமையின் நோக்கெல்லை

*1. இச்சமவாயம், வெகுமதிக்காக வானூர்திகளினால் புரியப்படும், ஆட்களை, பொதியை அல்லது சரக்கை ஏற்றிச்செல்லும் எல்லாச் சர்வதேச ஏற்றிச் செல்லல்களுக்கும் ஏற்புடையதாகும் வான் போக்குவரத்துப் பொறுப்பு முயற்சியொன்றினால் புரியப்படும் வானூர்திமூலம் கட்டண மில்லாத ஏற்றிச்செல்லலுக்கும் இதே போன்று இது ஏற்புடையதாகும்.*

*2. இச்சமவாயத்தின் நோக்கங்களுக்காக, "சர்வதேச ஏற்றிச் செல்லல்" என்ற சொல்லமைப்பு, திறத்தவர்களுக்கிடையேயான உடன்படிக்கையின்படி, ஏற்றிச் செல்லலில் ஓர் இடைநிறுத்தம் அல்லது வான்பலமாற்றம் இருப்பினுஞ்சரி அல்லது இல்லாதாயினுஞ்சரி, புறப்படும் இடமும் சேரிடமும், ஒன்றில் இரு அரசுத் திறத்தவர்களின் ஆள்புலன்களினுள் அல்லது இன்னோர் அரசின் ஆள்புலத்தினுள் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட நிறுத்திட மொன்றிருப்பின், ஓர் அரசு அரசுத் திறத்தவரொருவராக இல்லாதிருப்பி னுங்கூட, அந்தத் தனி அரசுத் திறத்தவரின் ஆள்புலத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் ஏற்றிச்செல்லல் என்று பொருளாகும். இன்னோர் அரசின் ஆள்புலத்தினுள் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட நிறுத்திடமொன்றின்றி தனி அரசுத் திறத்தவரின் ஆள்புலத்தினுள் இரு புள்ளிகளுக்கிடையேயான ஏற்றிச்செல்லல், இச்சமவாயத்தின் நோக்கங்களுக்காகச் சர்வதேச ஏற்றிச் செல்லல் அல்ல.*

*3. அடுத்துறும் பல்வேறு ஏற்றிச் செல்பவர்களினால் புரியப்படவுள்ள ஏற்றிச் செல்லல், இச்சமவாயத்தின் நோக்கங்களுக்காக, ஒரு தனி ஒப்பந்தத்தின் கீழான அல்லது தொடர்ச்சியான ஒப்பந்தங்களின் கீழான வடிவத்தில் அது உடன்பட்டுக்கொள்ளப்பட்டிருப்பினுஞ்சரி, தனித் தொழிற்பாடொன்றாகத் திறத்தவர்களினால் அது கொள்ளப்பட்டிருப்பின் பிரிக்கப்படாதவோர் ஏற்றிச் செல்லலாக இருப்பதாகக் கருதப்படும் என்பதுடன், ஓர் ஒப்பந்தம் அல்லது தொடர்ச்சியான ஒப்பந்தங்கள் அதே அரசின் ஆள்புலத்தினுள் முழுமையாகப் புரியப்படவுள்ளதென்ற காரணத்தி னால் மட்டும் அதன் சர்வதேசப் பண்பை இழப்பதில்லை.*

*4. இச்சமவாயம், அதன்கண் அடங்கியுள்ள நியதிகளுக்கமைய V ஆம் அத்தியாயத்தில் தரப்பட்டுள்ள ஏற்றிச்செல்லலுக்கும் ஏற்புடையதாக வுள்ளது.*

### உறுப்புரை 2 – அரசினால் புரியப்பட்ட ஏற்றிச் செல்லலும் அஞ்சல் இனங்களை ஏற்றிச்செல்லும்

*1.* இச்சமவாயம், அரசினால் அல்லது சட்டப்படி அமைத்துருவாக்கப்பட்ட பகிரங்கக் குழுக்களினால் புரியப்பட்ட ஏற்றிச் செல்லலுக்கு ஏற்புடைய தாகவுள்ளது; ஆயின், *1* ஆம் உறுப்புரையில் விதிக்கப்பட்ட நிபந்தனை களினுள் அது அடங்குதல் வேண்டும்.

*2.* அஞ்சல் இனங்களை ஏற்றிச் செல்வதில், ஏற்றிச் செல்பவர்களுக்கும் அஞ்சல் நிருவாகங்களுக்கும் இடையேயான தொடர்பு முறைக்கு ஏற்புடையற் பாலனவான விதிகளுக்கிணங்க இயைபான அஞ்சல் நிருவாகத்துக்கு மட்டுமே ஏற்றிச் செல்பவர் பொறுப்பாதல் வேண்டும்.

*3.* இவ்வுறுப்புரையின் *2* ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகத் தவிர, இச்சமவாயத்தின் ஏற்பாடுகள் அஞ்சல் இனங்களை ஏற்றிச் செல்லலுக்கு ஏற்புடையனவாதலாகாது.

## அத்தியாயம் II

### ஆவணப்படுத்துகையும் பயணிகளையும், பொதியையும், சரக்கையும் ஏற்றிச்செல்லல் தொடர்பாக திறத்தவர்களின் கடமைகளும்

### உறுப்புரை 3 – பயணிகளும் பொதியும்

*1.* பயணிகளை ஏற்றிச் செல்லல் தொடர்பில், பின்வருவனவற்றைக் கொண்டுள்ள தனிப்பட்ட அல்லது கூட்டு ஏற்றிச் செல்லல் ஆவணமொன்று ஒப்படைக்கப்படுதல் வேண்டும்:

(அ) புறப்படும் இடங்களும் சேரிடங்களும் பற்றிய சுட்டிக்காட்டுகை;

(ஆ) புறப்படும் இடங்களும் சேரிடங்களும் தனி அரசுத் திறத்தவரின் ஆள்புலத்தினுள் இருப்பதுடன், உடன்பட்டுக்கொள்ளப்பட்ட நிறுத் திடங்களுள் ஒன்றோ பலவோ இன்னோர் அரசின் ஆள்புலத்தி னுள் இருப்பின், அரசின் அத்தகைய நிறுத்திடத்தின் குறைந்தபட்சம் ஒன்றின் சுட்டிக்காட்டுகை.

*2.* பந்தி *1* இல் சுட்டிக்காட்டப்பட்ட தகவலைப் பேணிக்காக்கின்ற வேறெவையேனும் வழிவகைகள், அப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணத்தின் ஒப்படைப்புக்குப் பதிலீடு செய்யப்படலாம். அத்தகைய வேறெவையேனும் வழிவகைகள் பயன்படுத்தப்படின், ஏற்றிச் செல்பவர், அவ்வாறு பேணிக்காக்கப்பட்ட தகவல் பற்றிய எழுத்திலான கூற்றைப் பயணியிடம் ஒப்படைப்பதற்கு முனைதல் வேண்டும்.

3. ஏற்றிச் செல்பவர், சரிபார்க்கப்பட்ட ஒவ்வொரு பொதிக்கும் பொதி இனங்காணல் ஒட்டுச்சீட்டு ஒன்றைப் பயணியிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

4. இச்சமவாயம் ஏற்புடையற்பாலதாகவிருக்குமிடத்து இறப்பு அல்லது ஊறுபாடு மற்றும் பொதியின் அழிவு அல்லது இழப்பு அல்லது அதற்கான சேதம் அத்துடன் தாமதம் என்பன தொடர்பில் ஏற்றிச் செல்பவர்களின் பொறுப்பை ஆளுகின்றது மற்றும் வரையறுக்கலாமென்ற பொருள்பட பயணிக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுக்கப்படுதல் வேண்டும்.

5. மேற்போந்த பந்திகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை, ஏற்றிச்செல்லல் ஒப்பந்தம் உள்ளமையை அல்லது அதன் செல்லுபடியாந் தன்மையைப் பாதித்தலாகாது; இது, எவ்வாறாயினும், பொறுப்பு வரையறுத்தல் தொடர்பான விதிகளுட்பட இச்சமவாயத்தின் விதிகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

### உறுப்புரை 4 – சரக்கு

1. சரக்கை ஏற்றிச் செல்லல் தொடர்பில் வானூர்தி வழிப்பட்டியல் ஒன்று ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

2. புரியப்படவேண்டிய ஏற்றிச் செல்லல் பற்றிய பதிவேட்டைப் பேணிக் காக்கின்ற வேறெவையேனும் வழிவகைகள், வானூர்தி வழிப்பட்டியலொன்றை ஒப்படைப்பதற்குப் பதிலீடு செய்யப்படலாம். அத்தகைய வேறு வழிவகைகள் பயன்படுத்தப்படின், ஏற்றிச் செல்பவர், அனுப்புநரினால் அவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்படின், அனுப்பு பொருட்டொகுதியின் இனங்காணலையும் அத்தகைய வேறு வழிவகைகள்மூலம் பேணிக்காக்கப்பட்ட பதிவேட்டில் அடங்கியுள்ள தகவலுக்கான அணுகுகையையும் அனுமதித்து சரக்குப் பற்றுச்சீட்டொன்றை அனுப்புநரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

### உறுப்புரை 5 – வானூர்தி வழிப்பட்டியலின் அல்லது சரக்குப் பற்றுச்சீட்டின் உள்ளீடுகள்

வானூர்தி வழிப்பட்டியல் அல்லது சரக்குப் பற்றுச்சீட்டு பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:

(அ) புறப்படும் இடங்களும் சேரிடங்களும் பற்றிய சுட்டிக்காட்டுகை;

(ஆ) புறப்படும் இடங்களும் சேரிடங்களும் தனி அரசுத் திறத்தவரொருவரின் ஆள்புலத்தினுள் இருப்பின் மற்றும் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட நிறுத்திடங்களுள் ஒன்றோ அல்லது பலவோ இன்னோர் அரசின் ஆள்புலத்தினுள் இருப்பின், அத்தகைய நிறுத்திடத்தின் குறைந்தபட்சம் ஒன்றின் சுட்டிக்காட்டுகை; அத்துடன்

(இ) அனுப்பு பொருட்டொகுதியின் சுட்டிக்காட்டுகை.

**உறுப்புரை 6 – சரக்கின் தன்மை தொடர்பான ஆவணம்**

அனுப்புநர், அவசியமாயின், சுங்க, பொலிசு மற்றும் ஒத்த பகிரங்க அதிகாரசபைகளின் விதிமுறைகளை ஈடுசெய்வதற்கு, சரக்கின் தன்மையைச் சுட்டிக்காட்டுகின்ற ஆவணமொன்றை ஒப்படைக்கும்படி தேவைப்படுத்தப் படலாம். இவ்வேற்பாடு, அதிலிருந்து விளைகின்ற கடமை, கடப்பாடு அல்லது பொறுப்பு எதனையும் ஏற்றிச் செல்பவருக்கு உருவாக்குவதில்லை.

**உறுப்புரை 7 – வானூர்தி வழிப்பட்டியலின் விவரணம்**

1. வானூர்தி வழிப்பட்டியல், மூன்று மூலப்பாகங்களில் அனுப்புநரினால் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

2. முதலாவது பாகம் “ஏற்றிச் செல்பவருக்கு” எனக் குறியிடப்படுதல் வேண்டும்; அது அனுப்புநரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும். இரண்டாவது பாகம் “ஒப்படை பெறுநருக்கு” எனக் குறியிடப்படுதல் வேண்டும்; அது அனுப்புநரினாலும் ஏற்றிச் செல்பவரினாலும் கையொப்ப மிடப்படுதல் வேண்டும். மூன்றாவது பாகம் ஏற்றிச் செல்பவரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்; சரக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் அவர் அதனை அனுப்புநரிடம் கையளித்தல் வேண்டும்.

3. ஏற்றிச் செல்பவரினதும் அனுப்புநரினதும் கையொப்பம் அச்சிடப்பட லாம் அல்லது இலச்சினையிடப்படலாம்.

4. அனுப்புநரின் வேண்டுகோளின்பேரில் ஏற்றிச்செல்பவர் வானூர்தி வழிப்பட்டியலைத் தயாரித்தால், முரணான எண்பிப்புக்கமைய, ஏற்றிச் செல்பவர் அனுப்புநரின் சார்பில் அவ்வாறு செய்துள்ளாரெனக் கருதப் படுதல் வேண்டும்.

**உறுப்புரை 8 – பல பொதிகளுக்கான ஆவணப்படுத்துகை**

ஒன்றுக்கு மேற்பட்ட பொதிகள் இருக்கும்போது:

(அ) தனிவேறான வானூர்தி வழிப்பட்டியல்களைத் தயாரிக்கும்படி அனுப்புநரைத் தேவைப்படுத்துவதற்கான உரிமையை சரக்கை ஏற்றிச்செல்பவர் கொண்டிருப்பார்;

(ஆ) 4 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு வழிவகைகள் பயன்படுத்தப்படும்போது தனிவேறான சரக்குப் பற்றுச்சீட்டுகளை ஒப்படைக்கும்படி ஏற்றிச் செல்பவரைத் தேவைப்படுத்துவதற்கான உரிமையை அனுப்புநர் கொண்டிருப் பார்.

**உறுப்புரை 9 – ஆவணமுறையான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை**

*4 முதல் 8 வரையிலான உறுப்புரைகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை, ஏற்றிச்செல்லல் ஒப்பந்தம் உள்ளமையை அல்லது அதன் செல்லுபடியாந்தன்மையைப் பாதித்தலாகாது; அது, எவ்வாறாயினும், பொறுப்பு வரையறுத்தல் தொடர்பானவையுட்பட இச்சமவாயத்தின் விதிகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.*

**உறுப்புரை 10 – ஆவணப்படுத்துகையின் விபரங்களுக்கான பொறுப்பு**

*1. அனுப்புநர், வானூர்தி வழிப்பட்டியலில் அதனால் அல்லது அதன்சார்பில் உட்புகுத்தப்பட்ட அல்லது சரக்குப் பற்றுச்சீட்டில் உட்புகுத்தப்படுவதற்கான அல்லது 4 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு வழிவகைகள் மூலம் பேணிக்காக்கப்பட்ட பதிவேட்டில் உட்புகுத்தப்படுவதற்காக அதனால் அல்லது அதன்சார்பில் ஏற்றிச் செல்பவருக்குக் கொடுத்துதவப்பட்ட, சரக்குத்தொடர்பான விபரங்களினதும் கூற்றுக்களினதும் சரியான தன்மைக்குப் பொறுப்பாகவுள்ளார். அனுப்புநரின்சார்பில் செயலாற்றுகின்ற ஆள் ஏற்றிச் செல்பவரின் முகவராகவும் உள்ளவிடத்து மேற்போந்தவை ஏற்புடையனவாதலும் வேண்டும்.*

*2. அனுப்புநரினால் அல்லது அதன்சார்பில் கொடுத்துதவப்பட்ட விபரங்களினதும் கூற்றுக்களினதும் ஒழுங்கீனம், பிழையானதன்மை அல்லது பூரணமற்றதன்மை காரணமாக, ஏற்றிச் செல்பவரினால், அல்லது ஏற்றிச் செல்பவர் எந்த ஆளுக்குப் பொறுப்பாகவுள்ளாரோ அந்த வேறெவரேனும் ஆளினால் கூறப்பட்ட எல்லாச் சேதங்களுக்கும் எதிராக அனுப்புநர் ஏற்றிச் செல்பவருக்கு நட்டோத்தரவாதமளித்தல் வேண்டும்.*

*3. இவ்வுறுப்புரையின் 1 ஆம், 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய, ஏற்றிச் செல்பவர், சரக்குப் பற்றுச்சீட்டில் அல்லது 4 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு வழிவகைகள் மூலம் பேணிக்காக்கப்பட்ட பதிவேட்டில் ஏற்றிச் செல்பவரினால் அல்லது அதன் சார்பில் உட்புகுத்தப்பட்ட விபரங்களினதும் கூற்றுக்களினதும் ஒழுங்கீனம், பிழையானதன்மை அல்லது பூரணமற்றதன்மை காரணமாக அனுப்புநரினால் அல்லது அனுப்புநர் எந்த ஆளுக்குப் பொறுப்பாகவுள்ளாரோ அந்த வேறெவரேனும் ஆளினால் உறப்பட்ட எல்லாச் சேதங்களுக்கும் எதிராக அனுப்புநருக்கு நட்டோத்தரவாதமளித்தல் வேண்டும்.*

**உறுப்புரை 11 – ஆவணப்படுத்துகையின் சான்றிய மதிப்பு**

*1. வானூர்தி வழிப்பட்டியல் அல்லது சரக்குப் பற்றுச்சீட்டு ஆகியன, ஒப்பந்தத்தின் முடிபு, சரக்கின் ஏற்றுக்கொள்கை மற்றும் அதன்கண் குறிப்பிடப்பட்ட ஏற்றிச் செல்லல் நிபந்தனைகள் என்பன பற்றிய முதற்றோற்றச் சான்றாகும்.*

*2. சரக்கின் எடை, பரிமாணங்கள் மற்றும் பொதியிடுகை தொடர்பாக, மற்றும் பொதிகளின் எண்ணிக்கை தொடர்பாக வானூர்தி வழிப்பட்டிய லிலான அல்லது சரக்குப் பற்றுச்சீட்டிலான எவையேனும் கூற்றுக்கள், கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்றோற்றச் சான்றாகும்; சரக்கின் அளவு, தொகை மற்றும் நிலைமை தொடர்பானவை, அனுப்புநரின் முன்னிலையில் அவை இரண்டும் சரிபார்க்கப்பட்டுள்ள மற்றும் வானூர்தி வழிப்பட்டியலில் அல்லது சரக்குப் பற்றுச்சீட்டில் சரிபார்க்கப்பட்டுள்ளனவெனக் கூறப்பட்டுள்ள அல்லது சரக்கின் வெளிப்படையான நிலைமையுடன் தொடர்புபட்ட அளவுவரைதவிர, ஏற்றிச் செல்பவருக்கு எதிரான சான்றாக அமைவதில்லை.*

### *உறுப்புரை 12 – சரக்கைக் கையுதிர்ப்பதற்கான உரிமை*

*1. அனுப்புநர், ஏற்றிச் செல்லல் ஒப்பந்தத்தின்கீழ் அதன் கடப்பாடுகள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவதற்கான அதன் பொறுப்புக்கமைய, சரக்கைப் புறப்படும் இடத்திலுள்ள விமான நிலையத்தில் அல்லது சேரிடத்திலுள்ள விமான நிலையத்தில் மீளப்பெறுவதன்மூலம் அல்லது பயணத்தின்போது ஏதேனும் தரையிறங்குதலின்மீது அதனைத் தடுத்து நிறுத்திவிடுவதன்மூலம் அல்லது சேரிடத்தில் அல்லது பயணத்தின்போது, தொடக்கத்தில் பெயர் குறிக்கப்பட்ட ஒப்படை பெறுநரல்லாத வேறு ஆளொருவருக்கு அதனை ஒப்படைக்குப்படி கோருவதன்மூலம் அல்லது புறப்படும் விமான நிலையத்துக்கு அதனைத் திருப்பிக் கொடுக்கும்படி தேவைப்படுத்துவதன்மூலம் அதனைக் கையுதிர்ப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளார். அனுப்புநர் இக்கையுதிர்ப்புக்கான உரிமையை ஏற்றிச் செல்பவருக்கு அல்லது வேறு அனுப்புநர்களுக்குப் பங்கம் விளைவிக்கின்ற வாறான அத்தகையவொரு வழியில் பிரயோகித்தலாகாதென்பதுடன், இவ்வுரிமையைப் பிரயோகித்தமையினால் ஏற்பட்ட எவையேனும் செலவு களை மீளளித்தலும் வேண்டும்.*

*2. அனுப்புநரின் அறிவுறுத்தல்களை நிறைவேற்ற இயலாதிருப்பின், ஏற்றிச் செல்பவர் உடனடியாக அனுப்புநருக்கு அவ்வாறு அறிவித்தல் வேண்டும்.*

*3. அனுப்புநரிடம் ஒப்படைக்கப்பட்ட வானூர்தி வழிப்பட்டியலின் பாகத்தை அல்லது சரக்குப் பற்றுச்சீட்டைக் காண்பிக்கும்படி தேவைப் படுத்தாமல் சரக்கைக் கையுதிர்ப்பதற்கான அனுப்புநரின் அறிவுறுத்தல் களை ஏற்றிச் செல்பவர் நிறைவேற்றினால், ஏற்றிச் செல்பவர், அனுப்பு நரிடமிருந்து அறிவிடுவதற்கான அதன் உரிமைக்குப் பங்கமின்றி, வானூர்தி வழிப்பட்டியலின் அப்பாகத்தை அல்லது சரக்குப் பற்றுச்சீட்டைச் சட்ட முறையாக உடைமையில் வைத்திருக்கும் எவரேனுமாளுக்கு அதன்மூலம் விளைவிக்கப்படக்கூடிய ஏதேனும் சேதத்துக்காக ஆளாவார்.*

*4. அனுப்புநருக்கு அளிக்கப்பட்ட உரிமை, 13 ஆம் உறுப்புரைக்கிணங்க ஒப்படை பெறுநரின் உரிமை தொடங்கும்போது இல்லாதொழிகின்றது. ஆயின், ஒப்படை பெறுநர் சரக்கை ஏற்றுக்கொள்ள மறுத்தால் அல்லது அவருடன் தொடர்புகொள்ள முடியாவிட்டால், ஒப்படை பெறுநர் அதன் கையுதிர்ப்புக்கான உரிமையை மீளப்பெறுகின்றார்.*

**உறுப்புரை 13 – சரக்கை ஒப்படைத்தல்**

*1. அனுப்புநர், 12 ஆம் உறுப்புரையின்கீழ் அதன் உரிமையைப் பிரயோகித்துள்ளபோது தவிர, ஒப்படை பெறுநர், சேரிடத்தைச் சரக்கு வந்தடைவதன்மேல் வருமதியான கட்டணங்களைச் செலுத்துவதன் மீதும், ஏற்றிச் செல்லல் நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதன்மீதும், சரக்கை அதனிடம் ஒப்படைக்கும்படி ஏற்றிச் செல்பவரைத் தேவைப்படுத்துவதற்கு உரித்துடையவராகவுள்ளார்.*

*2. வேறுவகையாக உடன்பட்டுக் கொள்ளப்பட்டாலொழிய, சரக்கு வந்தடைந்தவுடன் ஒப்படை பெறுநருக்கு அறிவித்தல் கொடுத்தல் ஏற்றிச் செல்பவரின் கடமையாகும்.*

*3. சரக்கு தொலைந்துபோனமையை ஏற்றிச் செல்பவர் ஒப்புக்கொண்டால் அல்லது சரக்கானது அத்தேதியன்று வந்தடைந்திருக்க வேண்டுமோ அத்தேதிக்குப் பின்னர் ஏழு நாட்கள் முடிவுற்ற போதிலும் அது வந்தடையாவிட்டால், ஒப்படை பெறுநர், ஏற்றிச் செல்லல் ஒப்பந்தத்திலிருந்து விளைகின்ற உரிமைகளை ஏற்றிச் செல்பவருக்கு எதிராக வலுவுறுத்துவதற்கு உரித்துடையவராகவுள்ளார்.*

**உறுப்புரை 14 – அனுப்புநரின் மற்றும் ஒப்படை பெறுநரின் உரிமைகளை வலுவுறுத்துதல்**

*அனுப்புநரும் ஒப்படை பெறுநரும், ஒவ்வொருவரும் அதன் சொந்தப் பெயரில் அதன் சொந்த நலன்கருதி அல்லது இன்னொருவரின் நலன்கருதி அது செயலாற்றுகின்றதாயினுஞ்சரி 12ஆம், 13ஆம் உறுப்புரைகளினால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட எல்லா உரிமைகளையும் முறையே வலுவுறுத்த முடியும்; ஆயின், ஏற்றிச்செல்லல் ஒப்பந்தத்தினால் சுமத்தப்பட்ட கடப்பாடுகளை அது நிறைவேற்றுதல் வேண்டும்.*

**உறுப்புரை 15 – அனுப்புநரினதும் ஒப்படை பெறுநரினதும் தொடர்புகள் அல்லது மூன்றாந் திறத்தவர்களின் பரஸ்பரத் தொடர்புகள்**

*1. ஒன்றில் அனுப்புநருக்கும் ஒப்படை பெறுநருக்கும் இடையேயான தொடர்புகளை அல்லது ஒன்றில் அனுப்புநரிடமிருந்து அல்லது ஒப்படை பெறுநரிடமிருந்து அவர்களின் உரிமைகளைப் பெறுகின்ற மூன்றாந் திறத்தவர்களின் பரஸ்பரத் தொடர்புகளை 12ஆம், 13ஆம், 14ஆம் உறுப்புரைகள் பாதிப்பதில்லை.*

*2. வானூர்தி வழிப்பட்டியலில் அல்லது சரக்குப் பற்றுச்சீட்டில் 12ஆம், 13ஆம், 14ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகளை வெளிப்படையான ஏற்பாட்டின்மூலம் மட்டுமே வேறுபடுத்த முடியும்.*

**உறுப்புரை *16* – சுங்கம், பொலிசு அல்லது வேறு பகிரங்க அதிகாரசபைகள் என்பவற்றின் விதிமுறைகள்**

*1. அனுப்புநர், ஒப்படை பெறுநரிடம் சரக்கு ஒப்படைக்கப்படுமுன்னர், சுங்கம். பொலிசு மற்றும் வேறு பகிரங்க அதிகாரசபைகள் என்பவற்றின் விதிமுறைகளை ஈடுசெய்வதற்கு அவசியமானவாறான அத்தகைய தகவலையும் அத்தகைய ஆவணங்களையும் கொடுத்துதவுதல் வேண்டும். ஏதேனும் சேதமானது ஏற்றிச் செல்பவரின், அதன் சேவையாளர்களின் அல்லது முகவர்களின் தவறு காரணமாக ஏற்பட்டாலொழிய, அத்தகைய ஏதேனும் தகவல் அல்லது ஆவணங்கள் இல்லாதிருத்தல், அவை போதியன வாகவில்லாதிருத்தல் அல்லது அவை ஒழுங்கீனமாகவிருத்தல் என்பவற்றி னால் ஏற்படுத்தப்பட்ட சேதத்துக்காக அனுப்புநர் ஏற்றிச்செல்பவருக்குப் பொறுப்பாகவுள்ளார்.*

*2. அத்தகைய தகவலின் அல்லது ஆவணங்களின் சரியானதன்மை அல்லது போதியாந்தன்மை பற்றி விசாரணை செய்வதற்கு ஏற்றிச் செல்பவர் கடப்பாடெதனையும் கொண்டிருப்பதில்லை.*

## *அத்தியாயம்* III

**சேதத்துக்காக ஏற்றிச் செல்பவரின் பொறுப்பும் நட்டஈட்டின் அளவும்**

**உறுப்புரை *17* – பயணிகளின் இறப்பும் ஊறுபாடும் - பொதிக்கான சேதம்**

*1. பயணியொருவரின் இறப்பை அல்லது உடலூறுபாட்டை விளைவித்த விபத்து, வானூர்தியில் அல்லது வானூர்தியினுள் ஏறுகின்ற அல்லது வானூர்தியிலிருந்து இறங்குகின்ற தொழிற்பாடுகள் எவற்றின்போதும் இடம்பெற்றது என்ற நிபந்தனையின்மீது மட்டுமே, இறப்பின் அல்லது உடலூறுபாட்டின் விடயத்தில் உறப்பட்ட சேதத்துக்காக ஏற்றிச் செல்பவர் ஆளாகவுள்ளார்.*

*2. சரிபார்க்கப்பட்ட பொதியின் அழிவை, இழப்பை அல்லது சேதத்தை விளைவித்த நிகழ்வு, வானூர்தியில், அல்லது சரிபார்க்கப்பட்ட பொதி ஏற்றிச் செல்பவரின் பொறுப்பில் இருந்த ஏதேனும் காலப்பகுதியின்போது இடம் பெற்றது என்ற நிபந்தனையின்மீது மட்டுமே சரிபார்க்கப்பட்ட பொதிக்கான அழிவின் அல்லது இழப்பின் அல்லது சேதத்தின் விடயத்தில் உறப்பட்ட சேதத்துக்கு ஏற்றிச் செல்பவர் ஆளாகவுள்ளார். எவ்வாறாயினும், பொதி யின் உள்ளார்ந்த குறைபாடு, தரம் அல்லது சீர்கேட்டிலிருந்து சேதம் விளைந் திருப்பின், மற்றும் விளைந்த அளவுக்கு ஏற்றிச்செல்பவர் ஆளாகமாட்டார்.*

சொந்தப் பொருட்களுட்பட, சரிபார்க்கப்படாத பொதியின் விடயத்தில், ஏற்றிச்செல்பவரின் தவறு காரணமாக அல்லது அதன் சேவையாளர்களின் அல்லது முகவர்களின் தவறு காரணமாகச் சேதம் விளைந்திருப்பின், ஏற்றிச் செல்பவர் ஆளாகவுள்ளார்.

3. சரிபார்க்கப்பட்ட பொதி காணாமற் போனமையை ஏற்றிச் செல்பவர் ஒப்புக்கொண்டால் அல்லது சரிபார்க்கப்பட்ட பொதி, அது வந்தடைந் திருக்கவேண்டிய தேதிக்குப் பின்னர் இருபத்தொரு நாட்கள் முடிவுற்ற போதிலும் வந்தடையாதிருந்தால், ஏற்றிச் செல்லல் ஒப்பந்தத்திலிருந்து விளைகின்ற உரிமைகளை ஏற்றிச் செல்பவருக்கு எதிராக வலுவுறுத்து வதற்குப் பயணி உரித்துடையராகவுள்ளார்.

4. வேறுவகையாகக் குறித்துரைக்கப்பட்டாலொழிய, இச்சமவாயத்தில் "பொதி" என்னும் பதம், சரிபார்க்கப்பட்ட பொதியும் சரிபார்க்கப்படாத பொதியும் என்று பொருளாகும்.

#### உறுப்புரை 18 – சரக்குக்கான சேதம்

1. உறப்பட்ட சேதத்தை விளைவித்த நிகழ்வு வானூர்திமூலம் ஏற்றிச் செல்லலின்போது இடம்பெற்றது என்ற நிபந்தனையின்மீது மட்டுமே சரக்கின் அழிவு அல்லது இழப்பு அல்லது சேதம் ஏற்படும் பட்சத்தில் அவ்வாறு உறப்பட்ட சேதத்துக்கு ஏற்றிச் செல்பவர் ஆளாகவுள்ளார்.

2. எவ்வாறாயினும், சரக்கின் அழிவு அல்லது இழப்பு அல்லது சேதம் பின்வருவனவற்றுள் ஒன்றின் அல்லது பலவற்றின் விளைவானதாக விருந்ததென ஏற்றிச் செல்பவர் எண்பித்தால் மற்றும் எண்பிக்கும் அளவுக்கு அவர் ஆளாகமாட்டார்:

(அ) சரக்கின் உள்ளார்ந்த குறைபாடு, தரம் அல்லது சீர்கேடு;

(ஆ) ஏற்றிச் செல்பவர் அல்லது அதன் சேவையாளர்கள் அல்லது முகவர்கள் தவிர்ந்த வேறு ஆளொருவரினால் புரியப்பட்ட அச்சரக்கின் குறைபாடான பொதியிடுகை;

(இ) ஒரு போர்ச் செயல் அல்லது ஆயுதந்தாங்கிய மோதல்;

(ஈ) சரக்கின் உள்வருகை, வெளிச்செல்கை அல்லது இடைப்பெயர்வு சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட பகிரங்க அதிகாரசபையின் செயல்.

3. இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியின் பொருளுக்குட்பட வானூர்திமூலம் ஏற்றிச் செல்லல், சரக்கானது எக்காலப்பகுதியின்போது ஏற்றிச் செல்பவரின் பொறுப்பிலுள்ளதோ அக்காலப்பகுதியை அடக்குகின்றது.

4. வானூர்திமூலம் ஏற்றிச் செல்லல் காலப்பகுதி, ஒரு விமான நிலையத்துக்கு வெளியே புரியப்பட்ட தரைமூலமான, கடல்மூலமான அல்லது உள்நாட்டு நீர்வழிமூலமான ஏதேனும் ஏற்றிச்செல்லலுக்கு நீடிப்பதில்லை. எவ்வாறாயினும், ஏற்றுகின்ற, ஒப்படைக்கின்ற அல்லது சரக்கை மாற்றி யேற்றுகின்ற நோக்கத்துக்காக, வானூர்திமூலம் ஏற்றிச்செல்லலுக்கான ஒப்பந்தமொன்றைப் புரிகையில் அத்தகைய ஏற்றிச்செல்லல் இடம் பெறுமாயின் முரணான எண்பிப்புக்கமைய, ஏதேனும் சேதம், வானூர்தி மூலம் ஏற்றிச்செல்லலின்போது இடம்பெற்ற நிகழ்வொன்றின் விளைவான தாக இருந்ததென ஊகிக்கப்படுகின்றது. ஏற்றிச்செல்பவரொருவர், அனுப்புநரின் சம்மதமின்றி, வானூர்திமூலம் ஏற்றிச்செல்லலாக இருப்ப தற்குத் திறத்தவர்களிடையேயான உடன்படிக்கையினால் உட்கருதப்பட்ட ஏற்றிச் செல்லலின் முழுமைக்கும் அல்லது பாகத்துக்கு இன்னொரு போக்குவரத்து வழிமூலமான ஏற்றிச் செல்லலைப் பதிலீடுசெய்தால், இன்னொரு போக்குவரத்து வழிமூலமான அத்தகைய ஏற்றிச் செல்லல், வானூர்திமூலம் ஏற்றிச் செல்லல் காலப்பகுதியினுள்ளானதெனக் கருதப் படுகின்றது.

### உறுப்புரை 19 – தாமதம்

பயணிகளை, பொதியை அல்லது சரக்கை வானூர்திமூலமாக ஏற்றிச் செல்வதிலான தாமதத்தினால் விளைவிக்கப்பட்ட சேதத்துக்காக ஏற்றிச் செல்பவர் பொறுப்பாகவுள்ளார். எனினும், சேதத்தைத் தவிர்ப்பதற்கு நியாயமான முறையில் தேவைப்படக்கூடிய எல்லா வழிமுறைகளையும் அதுவும் அதன் சேவையாளர்களும் முகவர்களும் எடுத்தனரென அல்லது அத்தகைய வழிமுறைகளை எடுப்பதற்கு அது அல்லது அவர்கள் இயலாதிருந்தனரென ஏற்றிச் செல்பவர் எண்பித்தால், தாமதத்தினால் விளைவிக்கப்பட்ட சேதத்துக்காக அவர் பொறுப்பாதலாகாது.

### உறுப்புரை 20 – பொறுப்புவிடுவிப்பு

நட்டஈட்டை உரிமை கோருகின்ற ஆளின் அல்லது அவர் அல்லது அவள் எந்த ஆளிடமிருந்து அவரது அல்லது அவளது உரிமைகளைப் பெறுகின்றாரோ அந்த ஆளின் அசட்டையினால் அல்லது வேறு பிழையான செயலினால் அல்லது செய்யாமையினால் சேதம் விளைவிக்கப்பட்டது அல்லது அதற்கு ஏதுவாகவிருந்தது என ஏற்றிச் செல்பவர் எண்பித்தால், ஏற்றிச் செல்பவர், அத்தகைய அசட்டை அல்லது பிழையான செயல் அல்லது செய்யாமை சேதத்தை விளைவித்த அல்லது அதற்கு ஏதுவாகவிருந்த அளவுக்கு, உரிமைக் கோரிக்கையாளருக்கான அதன் பொறுப்பிலிருந்து முழுமையாக அல்லது பகுதியளவில் பொறுப்பு விடுவிக்கப்படுதல் வேண்டும். ஒரு பயணியின் இறப்பு அல்லது ஊறுபாடு காரணமாகப் பயணியல்லாத வேறோர் ஆளினால் நட்டஈடு உரிமை கோரப்படும்போது, சேதமானது அப்பயணியின் அசட்டையினால் அல்லது வேறு பிழையான செயலினால் அல்லது செய்யாமையினால் விளைவிக்கப்பட்டது அல்லது அந்த அசட்டை அல்லது பிழையான செயல் அல்லது செய்யாமை அதற்கு ஏதுவாகவிருந்தது

என ஏற்றிச் செல்பவர் எண்பிக்கும் அளவுக்கு அதன் பொறுப்பிலிருந்து அது அதேபோன்று, முழுமையாக அல்லது பகுதியளவில் விடுவிக்கப்படுதல் வேண்டும். இவ்வுறுப்புரை, 21 ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தியுட்பட, இச்சமவாயத்திலுள்ள எல்லாப் பொறுப்பு ஏற்பாடுகளுக்கும் ஏற்புடைய தாகும்.

## உறுப்புரை 21 – பயணிகளின் இறப்பு அல்லது ஊறுபாட்டின் விடயத்திலான நட்டஈடு

1. ஒவ்வொரு பயணிக்கும் 100,000 விசேட பெறுதல் உரிமைகளை விஞ்சாதவையும், 17 ஆம் உறுப்புரையின்கீழ் எழுகின்றவையுமான சேதங்களுக்காக, ஏற்றிச் செல்பவர் அதன் பொறுப்பைத் தவிர்ப்பதற்கு அல்லது வரையறுப்பதற்கு இயன்றதாதலாகாது.

2. ஏற்றிச் செல்பவர் பின்வருவனவற்றை எண்பித்தால், சேதங்கள் ஒவ்வொரு பயணிக்கும் 100,000 விசேட பெறுதல் உரிமைகளை விஞ்சுகின்ற அளவுக்கு, 17 ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தியின்கீழ் எழுகின்ற சேதங்களுக்கு ஏற்றிச் செல்பவர் பொறுப்பாதலாகாது:

(அ) அத்தகைய சேதம் ஏற்றிச் செல்பவரின் அல்லது அதன் சேவை யாளர்களின் அல்லது முகவர்களின் அசட்டை அல்லது வேறு பிழையான செயல் அல்லது செய்யாமை காரணமானதல்ல வென்றும்; அல்லது

(ஆ) அத்தகைய சேதம் ஒரு மூன்றாந்திறத்தவரின் அசட்டை அல்லது வேறு பிழையான செயல் அல்லது செய்யாமை காரணமாக மட்டுமே ஏற்பட்டதென்றும்.

## உறுப்புரை 22 – தாமதம், பொதி மற்றும் சரக்குத் தொடர்பான பொறுப்பின் வரையறைகள்

1. ஆட்களை ஏற்றிச் செல்வதில் 19 ஆம் உறுப்புரையிற் குறித்து ரைக்கப்பட்டவாறாகத் தாமதத்தினால் விளைவிக்கப்பட்ட சேதத்தின் விடயத்தில், ஒவ்வொரு பயணிக்காகவும் ஏற்றிச் செல்பவரின் பொறுப்பு 4,150 விசேட பெறுதல் உரிமைகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

2. பொதியை ஏற்றிச் செல்வதில், அழிவு, இழப்பு, சேதம் அல்லது தாமதம் என்பவற்றின் விடயத்தில் ஏற்றிச் செல்பவரின் பொறுப்பு, சரிபார்க்கப்பட்ட பொதி ஏற்றிச் செல்பவருக்குக் கையளிக்கப்பட்ட நேரத்தில் பயணியானவர், சேரிடத்தில் ஒப்படைப்பதிலான அக்கறைபற்றி விசேட வெளிப்படுத்துகை யொன்றைச் செய்து விடயம் அவ்வாறு தேவைப்படுத்தினால் குறைநிரப்புப் பணத்தொகையொன்றைச் செலுத்தியிருந்தாலொழிய, ஒவ்வொரு

பயணிக்காகவும் 1,000 விசேட பெறுதல் உரிமைகளுக்கு வரையறுக்கப்பட் டுள்ளது. அவ்விடயத்தில் ஏற்றிச் செல்பவர், சேரிடத்தில் ஒப்படைப்பதில் பயணியின் உண்மையான அக்கறையைப் பார்க்க பணத்தொகை கூடுதலாகவுள்ளதென அது எண்பித்தாலொழிய, வெளிப்படுத்தப்பட்ட பணத்தொகையை விஞ்சாத பணத்தொகையொன்றைச் செலுத்துவதற்குப் பொறுப்பாவார்.

3. சரக்கை ஏற்றிச் செல்வதில், அழிவு, இழப்பு, சேதம் அல்லது தாமதம் என்பவற்றின் விடயத்தில் ஏற்றிச் செல்பவரின் பொறுப்பு, ஏற்றிச் செல்பவருக்குச் சிப்பம் கையளிக்கப்பட்ட நேரத்தில், அனுப்புநர், சேரிடத்தில் ஒப்படைப்பதிலான அக்கறைபற்றி விசேட வெளிப்படுத்துகையொன்றைச் செய்து விடயம் அவ்வாறு தேவைப்படுத்தினால் குறைநிரப்புப் பணத்தொகையொன்றைச் செலுத்தியிருந்தாலொழிய, ஒரு கிலோகிராமுக்கு 17 விசேட பெறுதல் உரிமைகள் என்ற பணத்தொகைக்கு வரையறுக்கப் பட்டுள்ளது. அவ்விடயத்தில் ஏற்றிச் செல்பவர், சேரிடத்தில் ஒப்படைப் பதிலான அனுப்புநரின் உண்மையான அக்கறையைப் பார்க்க பணத்தொகை கூடுதலாகவுள்ளதென அது எண்பித்தாலொழிய, வெளிப்படுத்தப்பட்ட பணத்தொகையை விஞ்சாத பணத்தொகையொன்றைச் செலுத்துவதற்குப் பொறுப்பாவார்.

4. சரக்கின் பாகத்தின், அல்லது அதன்கண் அடங்கியுள்ள ஏதேனும் பொருளின் அழிவு, இழப்பு, சேதம் அல்லது தாமதம் என்பவற்றின் விடயத்தில், ஏற்றிச் செல்பவரின் பொறுப்பு எத்தொகைக்கு வரையறுக்கப் பட்டுள்ளதோ அத்தொகையைத் தீர்மானிப்பதில் கவனத்துட்கொள்ளப்பட வேண்டிய எடையானது, சம்பந்தப்பட்ட சிப்பத்தின் அல்லது சிப்பங்களின் மொத்த எடையாக மட்டுமே இருத்தல் வேண்டும். எனினும், சரக்கின் ஒருபாகத்தின் அல்லது அதன்கண் அடங்கியுள்ள ஒரு பொருளின் அழிவு, இழப்பு, சேதம் அல்லது தாமதம், அதே வானூர்தி வழிப்பட்டியலினால், அல்லது அதே பற்றுச்சீட்டினால் அல்லது அவை வழங்கப்பட்டிராவிடின், 4 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு வழிவகைகளின்மூலம் பேணிக்காக்கப்பட்ட அதே பதிவேட்டினால் மேவப்பட்ட ஏனைய சிப்பங்களின் பெறுமதியைப் பாதிக்கும்போது, அத்தகைய சிப்பத்தின் அல்லது சிப்பங்களின் மொத்த எடை பொறுப்பின் வரையறையைத் தீர்மானிப்பதில் கவனத்துட் கொள்ளப்படுதலும் வேண்டும்.

5. இவ்வுறுப்புரையின் 1 ஆம், 2 ஆம் பந்திகளின் மேற்போந்த ஏற்பாடுகள், சேதத்தை விளைவிப்பதற்கான உட்கருத்துடன் அல்லது கவனமின்மையுடன் மற்றும் சேதம் விளையக்கூடிய நிகழ்தகவுள்ளதென அறிந்துகொண்டு, ஏற்றிச் செல்பவரினால், அதன் சேவையாளர்களினால் அல்லது முகவர்க ளினால் செய்யப்பட்ட ஒரு செயலிலிருந்து அல்லது செய்யாமையிலிருந்து சேதம் விளைந்ததென எண்பிக்கப்படின் ஏற்புடையனவாதலாகாது; ஆயின், ஒரு சேவையாளரின் அல்லது முகவரின் அத்தகைய செயலின் அல்லது செய்யாமையின் விடயத்தில், அத்தகைய சேவையாளர் அல்லது முகவர் அதன் தொழிலின் நோக்கெல்லையினுள் செயலாற்றினாரெனவும் எண்பிக் கப்படுதல் வேண்டும்.

6. இருபத்தோராம் உறுப்புரையிலும் இவ்வுறுப்புரையிலும் விதித்துரைக் கப்பட்ட வரையறைகள், நீதிமன்றமானது, அதன் சொந்தச் சட்டத்துக்கிணங்க, மேலதிகமாக வட்டியுட்பட வழக்காளியினால் உறப்பட்ட நீதிமன்றச் செலவு தொகைகளினதும் வழக்காடுதலின் ஏனைய செலவுகளினதும் முழுமையை யும் அல்லது அதன் பாகத்தை அளிப்பதிலிருந்து நீதிமன்றத்தைத் தடுத்த லாகாது. சேதத்தை விளைவித்த நிகழ்வுத்தேதியிலிருந்து அல்லது வழக்குத் தொடங்கப்படுவதற்கு முன்னர், அது பிந்தியதாகவிருப்பின், ஆறுமாத காலப்பகுதியினுள் ஏற்றிச் செல்பவர் வழக்காளிக்கு எழுத்தில் முனையப் பட்ட பணத்தொகையை நீதிமன்றச் செலவு தொகைகளும் வழக்காடுதலின் ஏனைய செலவுகளும் நீங்கலாக, அளிக்கப்பட்ட சேதவீடுகளின் தொகை விஞ்சாதிருப்பின், மேற்போந்த ஏற்பாடு ஏற்புடையதாதலாகாது.

### உறுப்புரை 23 - பணக்கூறுகளை மாற்றுதல்

1. இச்சமவாயத்தில் விசேட பெறுதல் உரிமையின் நியதிகளின்படி குறிப்பிடப்பட்ட பணத்தொகைகள், சர்வதேசப் பண நிதியத்தினால் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறாக விசேட பெறுதல் உரிமையைக் குறிப்பீடு செய்வனவாகக் கருதப்படுதல் வேண்டும். பணத்தொகைகளைத் தேசிய நாணயங்களாக மாற்றுதல், நீதிநிருவாக நடவடிக்கைகளின் விடயத்தில், தீர்ப்புத் தேதியிலுள்ள விசேட பெறுதல் உரிமையின் நியதிகளின்படி, அத்தகைய நாணயங்களின் பெறுமதிக்கிணங்கச் செய்யப்படுதல் வேண்டும். சர்வதேசப் பண நிதியத்தின் உறுப்பினராகவுள்ள அரசுத் திறத்தவரொரு வரின், விசேட பெறுதல் உரிமையின் நியதிகளின்படி, தேசிய நாணய மொன்றின் பெறுமதி, அதன் தொழிற்பாடுகளுக்காகவும் கொடுக்கல் வாங்கல்களுக்காகவும், தீர்ப்புத் தேதியில் பயனுறுவதாகவுள்ள, சர்வதேசப் பண நிதியத்தினால் ஏற்புடையதாக்கப்பட்ட பெறுமதி மதிப்பீட்டு முறைக்கிணங்கக் கணக்கிடப்படுதல் வேண்டும். சர்வதேசப் பண நிதியத்தின் உறுப்பினராகவிராத அரசுத் திறத்தவரொருவரின், விசேட பெறுதல் உரிமையின் நியதிகளின்படி, தேசிய நாணயமொன்றின் பெறுமதி, அவ்வர சினால் தீர்மானிக்கப்பட்டவொரு முறையில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

2. எனினும், சர்வதேசப் பண நிதியத்தின் உறுப்பினர்களாக இராதனவும், இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையை அதன் சட்டம் அனுமதிக்காததுமான அவ்வரசுகள், ஏற்புறுதி அல்லது இணக்க நேரத்தில் அல்லது அதன்பின்னர் எந்நேரத்திலும், 21 ஆம் உறுப்புரையில் விதித்துரைக்கப்பட்ட ஏற்றிச் செல்பவரின் பொறுப்பினது வரையறை, அவர் களின் ஆள்புலன்களிலான நீதிநிருவாக நடவடிக்கைகளில் ஒரு பயணிக்கு 1,500,000 பணக்கூறுகள்; 22 ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தி தொடர்பில் ஒரு பயணிக்கு 62,500 பணக்கூறுகள்; 22 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தி தொடர்பில் ஒரு பயணிக்கு 15,000 பணக்கூறுகள், மற்றும் 22 ஆம் உறுப்புரையின் 3 ஆம் பந்தி தொடர்பில் ஒரு கிலோகிராமுக்கு 250 பணக் கூறுகள் என்ற பணத்தொகையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதென வெளிப் படுத்தலாம். இப்பணக்கூறு, ஆயிரங்களிலான நேர்த்தி தொளாயிரத்தின்

அறுபத்தைந்தரை மில்லிகிராம் தங்கத்துக்கு நேரொத்ததாகவுள்ளது. இப் பணத்தொகைகள், முழுமையான எண்களில் சம்பந்தப்பட்ட தேசிய நாணயங்களாக மாற்றப்படலாம். இப்பணத்தொகைகளைத் தேசிய நாணய மாக மாற்றுதல் சம்பந்தப்பட்ட அரசின் சட்டத்துக்கிணங்கச் செய்யப்படுதல் வேண்டும்.

3. இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியின் கடைசி வசனத்தில் குறிப்பிடப்பட்ட கணக்கிடுதலும், இவ்வுறுப்புரையின் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மாற்றல் முறையும், இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியின் முதல் மூன்று வசனங் களினதும் ஏற்புடைமையிலிருந்து விளைகின்றவாறான 21 ஆம், 22 ஆம் உறுப்புரைகளிலுள்ள, தொகைகளுக்கான அதே உள்ளபடியான பெறு மதியை இயன்றளவுவரை அரசுத் திறத்தவரின் தேசிய நாணயத்தில் வெளிப் படுத்துகின்றவாறான அத்தகைய முறையில் செய்யப்படுதல் வேண்டும். அரசுத் திறத்தவர்கள், இச்சமவாயத்துக்கான ஏற்புறுதி, ஏற்றுக்கொள்ளல், அங்கீகாரம், அல்லது இணக்கம் பற்றிய சாதனத்தை வைப்பிடும் போது மற்றும் இவற்றுள் ஒன்றிலான மாற்றமிருக்கும் போதெல்லாம், விடயத்துக்கேற்ப, இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியைப் பின்பற்றிய கணக்கிடும் முறையை, அல்லது இவ்வுறுப்புரையின் 2 ஆம் பந்தியிலுள்ள மாற்றத்தின் பெறுபேறை ஏமவைப்புக்காப்பாளருக்கு அறிவித்தல் வேண் டும்.

**உறுப்புரை 24 – வரையறைகளின் பரிசீலனை**

1. இச்சமவாயத்தின் 25 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்குப் பங்க மின்றியும் கீழே 2 ஆம் பந்திக்கமையவும், 21 ஆம், 22 ஆம், 23 ஆம் உறுப்புரைகளில் விதித்துரைக்கப்பட்ட பொறுப்பின் வரையறைகள், ஐந்தாண்டுக்கால இடைவெளிகளில் ஏமவைப்புக்காப்பாளரினால் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்; அத்தகைய முதலாவது பரிசீலனை இச்சமவாயம் வலுவுக்குவரும் தேதியை அடுத்துவரும் ஐந்தாவது ஆண்டின் முடிவில் அல்லது சமவாயம் கையொப்பத்துக்கு முதன்முதலாகக் கிடைக்கும் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளினுள் அது வலுவுக்கு வராதிருப்பின், அது வலுவுக்குவரும் முதலாவது ஆண்டினுள் முன்னைய பரிசீலனையிலிருந்து அல்லது முதற்படியாக சமவாயம் வலுவுக்குவரும் தேதியிலிருந்து திரண்ட பணவீக்க வீதத்துக்கு நேரொத்ததாகவுள்ள பணவீக்கக் காரணியொன்றைக் குறிப்பீடு செய்வதன் மூலம் இடம்பெறுதல் வேண்டும். பணவீக்கக் காரணி யைத் தீர்மானிப்பதில் பயன்படுத்தப்படவேண்டிய பணவீக்க வீதத்தின் அளவையானது, 23 ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட விசேட பெறுதல் உரிமையை எந்த அரசுகளின் நாணயங்கள் கொண் டுள்ளனவோ அந்த அரசுகளின் பாவனையாளர் விலைச் சுட்டிகளிலான வருடாந்த அதிகரிப்பு அல்லது குறைப்பு வீதங்களின் எடைவீதமளிக்கப்பட்ட சராசரியாகவிருத்தல் வேண்டும்.

2. முற்போந்த பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பரிசீலனை, பணவீக்கக் காரணி 10 சதவீதத்தை விஞ்சியுள்ளதென முடிபு செய்தால், ஏமவைப் பக்காப்பாளர், பொறுப்பின் வரையறைகள்பற்றிய பரிசீலனை பற்றி அரசுத் திறத்தவர்களுக்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய ஏதேனும் பரிசீலனை, அரசுத் திறத்தவர்களுக்கு அது அறிவிக்கப்பட்டதிலிருந்து ஆறு மாதங்க ளுக்குப் பின்னர் பயனுறுவதாக வருதல் வேண்டும். அரசுத் திறத்தவர் களுக்கு அது அறிவிக்கப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களினுள் அரசுத் திறத்தவர்களுள் பெரும்பான்மையோர் தமது அங்கீகார மறுப்பைப் பதிவுசெய்தால், பரிசீலனை பயனுறுவதாக வருதலாகாது என்பதுடன், ஏமவைப்புக்காப்பாளர் அக்கருமத்தை அரசுத் திறத்தவர்களின் கூட்ட மொன்றுக்கு ஆற்றுப்படுத்துதலும் வேண்டும். ஏதேனும் பரிசீலனை வலுவுக்கு வருகின்றமைபற்றி ஏமவைப்புக்காப்பாளர் உடனடியாக எல்லா அரசாங்கத் திறத்தவர்களுக்கும் அறிவித்தல் வேண்டும்.

3. இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தி எவ்வாறிருப்பினும், இவ்வுறுப்புரை யின் 2 ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட நடவடிக்கைமுறை எந்நேரத்திலும் ஏற்புடையதாக்கப்படுதல் வேண்டும்; ஆயின், அரசுத் திறத்தவர்களுள் மூன்றிலொரு பங்கினர் அப்பொருள்பட்ட விருப்பத்தைத் தெரிவிப்பதன் மீதும், 1 ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பணவீக்கக் காரணி, முன்னைய பரிசீலனையிலிருந்து அல்லது முன்னைய பரிசீலனை எதுவும் இராதிருப்பின் இச்சமவாயம் வலுவுக்குவரும் தேதியிலிருந்து 30 சதவீதத்தை விஞ்சியுள்ள தென்ற நிபந்தனையின் மேலும் எந்நேரத்திலும் ஏற்புடையதாக்கப்படுதல் வேண்டும். இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட நடவடிக்கை முறையைப் பயன்படுத்துகின்ற அடுத்துப்பின்னரான பரிசீலனைகள், தற்போதைய பந்தியின்கீழ் பரிசீலனைகளின் தேதியை அடுத்துவரும் ஐந்தாவது ஆண்டின் முடிபில் ஆரம்பித்து ஐந்தாண்டுகால இடைவெளி களில் இடம்பெறும்.

### உறுப்புரை 25 – வரையறைகளின்மீதான விதிப்பு

ஏற்றிச்செல்லல் ஒப்பந்தம் இச்சமவாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவற் றைத் தவிர்ந்த உயர்வான பொறுப்பு வரையறைகளுக்கு அமைந்ததாக விருத்தல் வேண்டும் அல்லது எத்தகையனவுமான பொறுப்பு வரையறைகள் எவற்றுக்கும் அமைந்ததாகவிருத்தலாகாது என ஏற்றிச்செல்பவரொருவர் விதிக்கலாம்.

### உறுப்புரை 26 – ஒப்பந்த முறையான ஏற்பாடுகளின் செல்லுபடியற்றதன்மை

ஏற்றிச்செல்பவரைப் பொறுப்பிலிருந்து விடுவிப்பதற்கு அல்லது இச் சமவாயத்தில் விதிக்கப்பட்டதைத் தவிர்ந்த குறைவான வரையறையை நிர்ணயிப்பதற்கு இட்டுச்செல்கின்ற ஏதேனும் ஏற்பாடு வெற்றானதும் வறிதானதுமாதல் வேண்டும்; ஆனால் அத்தகைய ஏதேனும் ஏற்பாட்டின் வெற்றானதன்மை முழு ஒப்பந்நத்தினதும் வெற்றானதன்மையை உட்படுத் தலும்; அது இச்சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கு அமைந்ததாகத் தொடர்ந் திருத்தல் வேண்டும்.

**உறுப்புரை 27 – ஒப்பந்தஞ்செய்வதற்கான சுதந்திரம்**

இச்சமவாயத்தில் அடங்கியுள்ளதெதுவும், ஏதேனும் ஏற்றிச் செல்லல் ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதற்கு ஏற்றிச் செல்பவர் மறுப்பதனை, சமவாயத்தின்கீழ் கிடைக்கக்கூடிய எவையேனும் பாதுகாப்புகளை விட்டுக் கொடுப்பதனை அல்லது இச்சமவாயத்தின் ஏற்பாடுகளுடன் முரண்படாத நிபந்தனைகளை விதிப்பதனைத் தடுத்தலாகாது.

**உறுப்புரை 28 – முற்பணக் கொடுப்பனவுகள்**

பயணிகளின் இறப்பை அல்லது ஊறுபாட்டை விளைவிக்கும் வானூர்தி விபத்துக்களின் விடயத்தில், ஏற்றிச் செல்பவர், அதன் தேசியச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படின், நட்டஈட்டை உரிமைகோருவதற்கு உரித்துள்ள ஓர் இயற்கை ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு, அத்தகைய ஆட்களின் உடனடிப் பொருளாதாரத் தேவைகளை ஈடுசெய்வதற்கெனத் தாமதமின்றி முற்பணக் கொடுப்பனவுகளை வழங்குதல் வேண்டும். அத்தகைய முற்பணக் கொடுப்பனவுகள் பொறுப்பின் ஏற்றங்கீகாரமாக அமைதலாகாதென்பதுடன், ஏற்றிச் செல்பவரினால் அடுத்துப்பின்னர் சேதவீடுகளாகச் செலுத்தப்படும் எவையேனும் தொகைகளுக்கெதிராக எதிரீடு செய்யவும்படலாம்.

**உறுப்புரை 29 – உரிமைக்கோரிக்கைகளின் அடிப்படை**

பயணிகளை, பொதியை மற்றும் சரக்கை ஏற்றிச் செல்வதில், இச் சமவாயத்தின்கீழாயினுஞ்சரி அல்லது ஒப்பந்தத்திலாயினுஞ்சரி அல்லது தீங்கியலிலாயினுஞ்சரி அல்லது வேறுவகையிலாயினுஞ்சரி, எத்தகையது மான அடிப்படையிலான சேதவீடுகளுக்கான ஏதேனும் வழக்கானது துடர்ச்சியைக் கொணர்வதற்கு எந்த ஆட்களுக்கு உரிமையுண்டு மற்றும் அவர்களின் முறையான உரிமைகள் எவை என்பதுபற்றிய கேள்விகளுக்குப் பங்கமின்றி இச்சமவாயத்தில் தரப்பட்டுள்ளவாறான நிபந்தனைகளுக்கும் பொறுப்பின் அத்தகைய வரையறைகளுக்கும் அமைய மட்டுமே கொணரப்பட முடியும். அத்தகைய ஏதேனும் வழக்கில், தண்டமுறை, மேற்காட்டாயமைந்த அல்லது வேறேதேனும் நட்டஈடுசாராச் சேதவீடுகள் அறவிடப்படற்பாலன வாதலாகாது.

**உறுப்புரை 30 – சேவையாளர்கள், முகவர்கள் - உரிமைக் கோரிக்கைகளின் கூட்டுச்சேர்க்கை**

1. எச்சேதத்துடன் சமவாயம் தொடர்புபட்டதோ அச்சேதத்திலிருந்து எழுகின்ற ஏற்றிச் செல்பவரின் சேவையாளர் அல்லது முகவர் ஒருவருக் கெதிராக வழக்கொன்று கொணரப்படின், அத்தகைய சேவையாளர் அல்லது முகவர், அவர்கள் தமது தொழிலின் நோக்கெல்லையினுள் செயலாற்றினரென எண்பித்தால், இச்சமவாயத்தின்கீழ் ஏற்றிச்செல்பவரே வேண்டுவதற்கு உரித்துடையவராகவுள்ள நிபந்தனைகளையும் பொறுப்பின் வரையறைகளையும் அவர்கள் பயன்படுத்துவதற்கு உரித்துடையராதல் வேண்டும்.

2. அவ்விடயத்தில், ஏற்றிச்செல்பவர், அதன் சேவையாளர்களும் முகவர்களும் என்போரிடமிருந்து அறவிடப்படற்பாலனவான தொகைகளின் கூட்டுமொத்தம், சொல்லப்பட்ட வரையறைகளை விஞ்சுதலாகாது.

3. சரக்கை ஏற்றிச்செல்லல் தொடர்பில் தவிர, இவ்வுறுப்புரையின் 1 ஆம், 2 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள், சேதத்தை விளைவிப்பதற்கான உட்கருத்துடன் அல்லது கவனமின்மையுடன் மற்றும் சேதம் விளையக்கூடிய நிகழ்தகவுள்ளதென அறிந்துகொண்டு செய்யப்பட்ட சேவையாளரின் அல்லது முகவரின் செயல் அல்லது செய்யாமை ஒன்றினால் சேதம் விளைவிக்கப்பட்டதென எண்பிக்கப்படின் ஏற்புடையனவாதலாகாது.

### உறுப்புரை 31 – முறைப்பாடுகள்பற்றி உரியகால அறிவித்தல்

1. சரிபார்க்கப்பட்ட பொதி அல்லது சரக்கு, முறைப்பாடின்றி ஒப்படைப்புக்கு உரித்துள்ள ஆளினால் கிடைக்கப்பெறுதல், அது நன்னிலையிலும் ஏற்றிச் செல்லல் ஆவணத்துக்கு அல்லது 3 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியில் மற்றும் 4 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு வழிவகைகள்மூலம் பேணிக்காக்கப்பட்ட பதிவேட்டுக்கு இணங்கவும் ஒப்படைக்கப்பட்டுள்ளதென்பதற்கு முதற்றோற்றச் சான்றாகும்.

2. சேதத்தின் விடயத்தில், ஒப்படைப்புக்கு உரித்துள்ள ஆள், சேதத்தைக் கண்டறிந்தபின்னர் உடனடியாகவும், சரிபார்க்கப்பட்ட பொதியின் விடயத்தில் மிகப்பிந்தியதாக, கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஏழு நாட்களினுள்ளும், சரக்கின் விடயத்தில் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள்ளும் முறைப்பாடு செய்தல் வேண்டும். தாமதத்தின் விடயத்தில், பொதி அல்லது சரக்கு அவரது அல்லது அவளது கையுதிர்ப்பில் இடப்பட்ட தேதியிலிருந்து மிகப்பிந்தியதாக இருபத்தொரு நாட்களினுள் முறைப்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

3. ஒவ்வொரு முறைப்பாடும் எழுத்தில் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், மேற்கூறப்பட்ட காலங்களினுள் கொடுக்கப்படுதலும் அல்லது அனுப்பப்படுதலும் வேண்டும்.

4. மேற்கூறப்பட்ட காலங்களினுள் முறைப்பாடெதுவும் செய்யப்படாவிடின், ஏற்றிச் செல்பவரின்பாலான மோசடியின் விடயத்தில் தவிர, அதற்கெதிராக வழக்கெதுவும் அமைவதாதலாகாது.

### உறுப்புரை 32 – பொறுப்பாகவுள்ள ஆளின் இறப்பு

பொறுப்பாகவுள்ள ஆள் இறக்கும் விடயத்தில், அவரது அல்லது அவளது மரணச்சொத்தைச் சட்டப்படி பிரதிநிதித்துவப்படுத்துவோருக் கெதிராக இச்சமவாயத்தின் நியதிகளுக்கிணங்கச் சேதவீடுகளுக்கான வழக்கொன்று அமைவதாகும்.

**உறுப்புரை 33 – நியாயாதிக்கம்**

*1.* சேதவீடுகளுக்கான வழக்கொன்று, வழக்காளியின் விருப்புத்தெரிவின் பேரில், அரசுத் திறத்தவர்களுள் ஒருவரின் ஆள்புலத்தில், ஒன்றில் ஏற்றிச் செல்பவரின் வாழிடத்திலுள்ள அல்லது அதன் பிரதான தொழிலிடத்திலுள்ள நீதிமன்றத்தின் முன்னர், அல்லது ஒப்பந்தமானது எந்தத் தொழினுட்பத் தினூடாகச் செய்யப்பட்டதோ அந்தத் தொழிலிடமொன்றை அது கொண் டிருக்கும் இடத்திலுள்ள நீதிமன்றத்தின் முன்னர் அல்லது சேரிடத்திலுள்ள நீதிமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

*2.* ஒரு பயணியின் இழப்பு அல்லது ஊறுபாடு என்பவற்றிலிருந்து விளைகின்ற சேதவீடுதொடர்பில், இவ்வுறுப்புரையின் 1 ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட அல்லது விபத்து ஏற்பட்ட நேரத்தில் பயணி அவரது அல்லது அவளது பிரதான மற்றும் நிரந்தரமான வதிவிடத்தை எந்த அரசுத் திறத்தவரின் ஆள்புலத்தில் கொண்டுள்ளாரோ அத்துடன் ஏற்றிச்செல்பவர், ஒன்றில் அதன் சொந்த வானூர்தியில் அல்லது ஒரு வர்த்தக உடன்படிக்கையைப் பின்பற்றி இன்னோர் ஏற்றிச்செல்பவரின் வானூர்தியில் பயணிகளை வானூர்திமூலம் ஏற்றிச்செல்வதற்கான சேவைகளை எந்த அரசுத் திறத்தவரின் ஆள்புலத்திற்கு அல்லது ஆள்புலத்திலிருந்து தொழிற்படுத்துகின்றாரோ அந்த அரசுத் திறத்தவரின் ஆள்புலத்திலுள்ள அத்துடன் எந்த அரசுத் திறத்தவரின் ஆள்புலத்தில் ஏற்றிச் செல்பவரி னாலேயே அல்லது அது வர்த்தக உடன்படிக்கையொன்றை அதனுடன் செய்துகொண்டுள்ள இன்னோர் ஏற்றிச் செல்பவரினால் குத்தகைக்கு விடப்பட்ட அல்லது சொந்தமாக வைத்திருக்கப்பட்ட வளவுகளிலிருந்து ஏற்றிச் செல்பவர் பயணிகளை வானூர்திமூலம் ஏற்றிச் செல்லும் தொழிலை அதில் நடாத்துகின்றாரோ அந்த அரசுத் திறத்தவரின் ஆள்புலத்திலுள்ள நீதிமன்றங்களுள் ஒன்றின்முன்னர் வழக்கொன்று கொணரப்படலாம்.

*3.* இரண்டாம் பந்தியின் நோக்கங்களுக்காக,

(அ) “வர்த்தக உடன்படிக்கை” என்பது, ஏற்றிச் செல்பவர்களுக் கிடையே செய்து கொள்ளப்பட்டதும், வானூர்திமூலம் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக அவர்கள் கூட்டுச்சேவை வழங்குதல் தொடர்பானதும், முகவர்நிலைய உடன்படிக்கை அல்லாததுமானவோர் உடன்படிக்கை என்று பொருளாகும்;

(ஆ) “பிரதான மற்றும் நிரந்தரமான வதிவிடம்” என்பது, விபத்து ஏற்பட்ட நேரத்தில் பயணியின் நிலையான மற்றும் நிரந்தரமான வாழிடம் என்று பொருளாகும். பயணியின் நாட்டினம் இது தொடர்பான தீர்மானிக்கும் காரணியாகவிருத்தலாகாது.

*4.* நடவடிக்கைமுறைபற்றிய கேள்விகள், விடயத்தைக் கைக்கொண்ட நீதிமன்றத்தின் சட்டத்தினால் ஆளப்படுதல் வேண்டும்.

### உறுப்புரை 34 – நடுத்தீர்ப்பு

1. இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, சரக்கை ஏற்றிச்செல்வதற்கான ஒப்பந்தத்துக்கான திறத்தவர்கள், இச்சமவாயத்தின் கீழ் ஏற்றிச் செல்பவரின் பொறுப்புத் தொடர்பான ஏதேனும் பிணக்கு நடுத்தீர்ப்பின் மூலம் இணக்கித் தீர்க்கப்படுதல் வேண்டுமென விதிக்கலாம். அத்தகைய உடன்படிக்கை எழுத்திலிருத்தல் வேண்டும்.

2. நடுத்தீர்ப்பு நடவடிக்கைகள், உரிமைக்கோரிக்கையாளரின் விருப்பத்தின் பேரில், 33 ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட நியாயாதிக்கங்களுள் ஒன்றினுள் இடம்பெறுதல் வேண்டும்.

3. நடுத்தீர்ப்பாளர் அல்லது நடுத்தீர்ப்பு நியாயசபை, இச்சமவாயத்தின் ஏற்பாடுகளை ஏற்புடையனவாக்குதல் வேண்டும்.

4. இவ்வுறுப்புரையின் 2 ஆம், 3 ஆம் பந்திகள், ஒவ்வொரு நடுத்தீர்ப்பு வாசகத்தினதும் அல்லது உடன்படிக்கையினதும் பாகமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதனோடு ஒவ்வாததாகவிருக்கின்ற அத்தகைய வாசகத்தின் அல்லது உடன்படிக்கையின் ஏதேனும் நியதி வெற்றானதும் வறிதானதுமாதலும் வேண்டும்.

### உறுப்புரை 35 – வழக்குகளை வரையறுத்தல்

1. சேரிடத்தை வந்தடைந்த தேதியிலிருந்து அல்லது வானூர்தி வந்தடைந்திருக்கவேண்டிய தேதியிலிருந்து அல்லது ஏற்றிச்செல்லல் நிறுத்தப்படும் தேதியிலிருந்து கணிப்பிடப்பட்ட இரண்டாண்டுக் காலப் பகுதியினுள் வழக்கொன்று கொணரப்படாவிடின், சேதவீடுகளுக்கான உரிமை தணிக்கப்படுதல் வேண்டும்.

2. அக்காலப்பகுதியைக் கணக்கிடும் முறை, வழக்கைக் கைக்கொண்ட நீதிமன்றத்தின் சட்டத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

### உறுப்புரை 36 – அடுத்துறும் ஏற்றிச் செல்லல்

1. பல்வேறு அடுத்துறும் ஏற்றிச்செல்பவர்களினால் புரியப்பட வேண்டியதும், 1 ஆம் உறுப்புரையின் 3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தினுள் அடங்குகின்றதுமான ஏற்றிச் செல்லலின் விடயத்தில், பயணிகளை, பொதியை அல்லது சரக்கை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வோர் ஏற்றிச் செல்பவரும், இச்சமவாயத்தில் தரப்பட்டுள்ள விதிகளுக்கு அமைந்த வராவதுடன், அதன் மேற்பார்வையின்கீழ் புரியப்படும் ஏற்றிச் செல்லலின் அப்பாகத்தை ஒப்பந்தம் கையாள்கின்ற அளவுவரை ஏற்றிச் செல்லல் ஒப்பந்தத்துக்கான திறத்தவர்களுள் ஒருவராகக் கருதப்படுகின்றார்.

2. இத்தன்மையினதான ஏற்றிச் செல்லலின் விடயத்தில், பயணி அல்லது அவர் அல்லது அவள் தொடர்பில் நட்டஈட்டுக்கு உரித்துடையவரான எவரேனுமாள், எந்த ஏற்றிச் செல்லலின்போது விபத்து அல்லது தாமதம் ஏற்பட்டதோ அந்த ஏற்றிச் செல்லலைப் புரிந்த ஏற்றிச் செல்பவருக்கு எதிராக மட்டுமே, வெளிப்படையான உடன்படிக்கையின்மூலம் முதலாவது ஏற்றிச் செல்பவர் முழுப்பயணத்துக்கும் பொறுப்பை ஏற்றியுள்ள விடயத்திற்றவிர, வழக்கு நடவடிக்கை எடுக்கமுடியும்.

3. பொறி அல்லது சரக்குத் தொடர்பாக, பயணி அல்லது அனுப்புநர் முதலாவது ஏற்றிச் செல்பவருக்கெதிராக வழக்குக்கான உரிமையைக் கொண்டிருப்பவர் என்பதுடன், பயணி அல்லது ஒப்படைப்புக்கு உரித்துள்ள ஒப்படைப்பெறுநர், கடைசி ஏற்றிச் செல்பவருக்கெதிராக வழக்குக்கான உரிமையையும் கொண்டிருப்பார்; மேலும், எந்த ஏற்றிச் செல்லலின்போது அழிவு, இழப்பு, சேதம் அல்லது தாமதம் இடம்பெற்றதோ அந்த ஏற்றிச் செல்லலைப் புரிந்த ஏற்றிச் செல்பவருக்கெதிராக ஒவ்வொருவரும் வழக்கு நடவடிக்கை எடுக்கலாம். இவ்வேற்றிச் செல்பவர்கள், பயணிக்கு அல்லது அனுப்புநருக்கு அல்லது ஒப்படைபெறுநருக்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாகவிருப்பர்.

**உறுப்புரை 37 – மூன்றாந் திறத்தவர்களுக்கெதிரான காப்படை உரிமை**

இச்சமவாயத்திலுள்ளதெதுவும், அதன் ஏற்பாடுகளுக்கிணங்கச் சேதவீட்டுக்கு ஆளாகவுள்ள ஆளொருவர் வேறெவரேனுமாளுக்கெதிராகக் காப்படை உரிமையொன்றைக் கொண்டுள்ளாரா? என்பது பற்றிய கேள்வியைப் பங்கப்படுத்துதலாகாது.

## அத்தியாயம் IV

### இணைந்த ஏற்றிச் செல்லல்

**உறுப்புரை 38 – இணைந்த ஏற்றிச் செல்லல்**

1. பகுதியளவில் வானூர்தி மூலமாகவும் பகுதியளவில் வேறுவகையான ஏதேனும் ஏற்றிச் செல்லல் வழிமூலமாகவும் புரியப்பட்ட இணைந்த ஏற்றிச் செல்லலின் விடயத்தில், இச்சமவாயத்தின் ஏற்பாடுகள், 18 ஆம் உறுப்புரையின் 4 ஆம் பந்திக்கமைய, வானூர்திமூலம் ஏற்றிச் செல்லலுக்கு மட்டுமே ஏற்புடையனவாதல் வேண்டும்; ஆயின் வானூர்திமூலம் ஏற்றிச் செல்லல் 1 ஆம் உறுப்புரையின் நியதிகளினுள் அடங்குதல் வேண்டும்.

2. இச்சமவாயத்திலுள்ளதெதுவும், இணைந்த ஏற்றிச் செல்லலின் விடயத்தில், வேறுவகையினவான ஏற்றிச் செல்லல் விதிகள் தொடர்பான வானூர்திமூலம் ஏற்றிச் செல்லல் நிபந்தனைகளை ஆவணத்தில் உட்புகுத்துவதனைத் தடுத்தலாகாது; ஆயின், இச்சமவாயத்தின் ஏற்பாடுகள், வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லல் தொடர்பாகக் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் V

## ஒப்பந்தஞ்செய்யும் ஏற்றிச் செல்பவர் தவிர்ந்த ஆளாருவரினால் புரியப்பட்ட வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லல்

### உறுப்புரை 39 – ஒப்பந்தஞ்செய்யும் ஏற்றிச் செல்பவர் - உண்மையாக ஏற்றிச் செல்பவர்

(இதனகத்துப்பின்னர் "ஒப்பந்தஞ்செய்யும் ஏற்றிச் செல்பவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆளொருவர், முதல்வரென்றமுறையில், இச்சமவாயத்தினால் ஆளப்பட்ட ஏற்றிச் செல்லல் ஒப்பந்தமொன்றை ஒரு பயணியுடன் அல்லது அனுப்புநருடன் அல்லது பயணியின் அல்லது அனுப்புநரின் சார்பில் செயலாற்றுகின்ற ஆளொருவருடன் செய்யும்போதும், (இதனகத்துப்பின்னர் "உண்மையாக ஏற்றிச் செல்பவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இன்னோராள், ஒப்பந்தஞ்செய்யும் ஏற்றிச்செல்பவரிட மிருந்தான அதிகாரத்தின் பயனைக் கொண்டு ஏற்றிச் செல்லலின் முழுமையையும் அல்லது அதன் பாகத்தைப் புரியும்போதும், ஆனால் அத்தகைய பாகம் தொடர்பில் இச்சமவாயத்தின் பொருளுக்குட்பட அடுத்துறும் ஏற்றிச் செல்பவரொருவராக இராதபோதும் இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகின்றன. முரணான எண்பிப்பு இல்லாதவிடத்து அத்தகைய அதிகாரம் ஊகிக்கப்படுதல் வேண்டும்.

### உறுப்புரை 40 – ஒப்பந்தஞ்செய்யும் மற்றும் உண்மையாக ஏற்றிச் செல்வோரின் முறையான பொறுப்பு

39 ஆம் உறுப்புரையிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி இச்சமவாயத்தினால் ஆளப்படுகின்ற ஏற்றிச்செல்லலின் முழுமையையும் அல்லது அதன் பாகத்தை உண்மையாக ஏற்றிச்செல்பவர் புரிந்தால், ஒப்பந்தஞ்செய்யும் ஏற்றிச்செல்பவரும் உண்மையாக ஏற்றிச்செல்பவரும், இவ்வத்தியாயத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, முன்னையவர் ஒப்பந்தத்தில் உத்தேசிக்கப்பட்ட ஏற்றிச்செல்லலின் முழுமைக்கும், பின்னையவர் அது புரிகின்ற ஏற்றிச்செல்லலுக்கு மட்டுமே இச்சமவாயத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

### உறுப்புரை 41 – பரஸ்பரப் பொறுப்பு

1. உண்மையாக ஏற்றிச் செல்பவரினதும் அவர்களின் தொழிலினது நோக்கெல்லையினுள் செயலாற்றுகின்ற அதன் சேவையாளர்களினதும் முகவர்களினதும் செயல்களும் செய்யாமைகளும், உண்மையாக ஏற்றிச் செல்பவரினால் புரியப்பட்ட ஏற்றிச் செல்லல் தொடர்பாக, உண்மையாக ஏற்றிச் செல்பவரினது செயல்களும் செய்யாமைகளும் எனக் கருதப்படுதலும் வேண்டும்.

2. ஒப்பந்தஞ்செய்யும் ஏற்றிச் செல்பவரினதும் அவர்களின் தொழிலினது நோக்கெல்லையினுள் செயலாற்றுகின்ற அதன் சேவையாளர்களினதும் முகவர்களினதும் செயல்களும் செய்யாமைகளும், உண்மையாக ஏற்றிச் செல்பவரினால் புரியப்பட்ட ஏற்றிச் செல்லல் தொடர்பாக, உண்மையாக ஏற்றிச் செல்பவரினது செயல்களும் செய்யாமைகளும் எனக் கருதப்படுதலும் வேண்டும். எனினும், அத்தகைய செயல் அல்லது செய்யாமை எதுவும், 21, 22, 23 மற்றும் 24 ஆகிய உறுப்புரைகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட தொகைகளை விஞ்சுகின்ற பொறுப்புக்கு உண்மையாக ஏற்றிச்செல்பவரை அமைந்தவராக்குதலாகாது. இச்சமவாயத்தினால் சுமத்தப்படாத கடப்பாடு களை ஏற்றிச்செல்பவர் எந்த விசேட உடன்படிக்கையின்கீழ் ஏற்கின்றாரோ அது ஏதேனும் விசேட உடன்படிக்கை, அல்லது இச்சமவாயத்தினால் அளிக்கப்பட்ட உரிமைகளின் அல்லது பாதுகாப்புகளின் ஏதேனும் விட்டுக்கொடுப்பு, அல்லது 22 ஆம் உறுப்புரையில் உத்தேசிக்கப்பட்ட சேரிடத்தில் ஒப்படைப்பதிலான அக்கறை பற்றிய ஏதேனும் விசேட வெளிப் படுத்துகை, உண்மையாக ஏற்றிச் செல்பவரினால் உடன்பட்டுக் கொள்ளப் பட்டாலொழிய, அதனைப் பாதித்தலாகாது.

### உறுப்புரை 42 – முறைப்பாடுகளும் அறிவுறுத்துதல்களும் எவருக்கு முகவரியிட்டனுப்பப்பட வேண்டுமென்பது

ஏற்றிச் செல்பவருக்கு இச்சமவாயத்தின் கீழ் செய்யப்படவேண்டிய ஏதேனும் முறைப்பாடு அல்லது விடுக்கப்படவேண்டிய ஏதேனும் அறிவுறுத்தல், அது ஒப்பந்தஞ்செய்யும் ஏற்றிச் செல்பவருக்கு அல்லது உண்மையாக ஏற்றிச் செல்பவருக்கு முகவரியிட்டனுப்பப்படினுஞ்சரி, அதே பயனையுடையதாதல் வேண்டும். எனினும், 12 ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவுறுத்தல்கள், ஒப்பந்தஞ்செய்யும் ஏற்றிச் செல்பவருக்கு முகவரியிட்டனுப்பப்படின் மட்டுமே பயனுறுவனவாதல் வேண்டும்.

### உறுப்புரை 43 – சேவையாளர்களும் முகவர்களும்

உண்மையாக ஏற்றிச் செல்பவரினால் புரியப்பட்ட ஏற்றிச் செல்லல் தொடர்பாக, அவ்வேற்றிச் செல்பவரின் அல்லது ஒப்பந்தஞ்செய்யும் ஏற்றிச் செல்பவரின் எவரேனும் சேவையாளர் அல்லது முகவர், அவர்கள் தமது தொழிலின் நோக்கெல்லையினுள் செயலாற்றினரென அவர்கள் எண்பித் தால், அவர்கள் எந்த ஏற்றிச் செல்பவரின் சேவையாளராக அல்லது முகவராக உள்ளனரோ அந்த ஏற்றிச் செல்பவருக்கு இச்சமவாயத்தின்கீழ் ஏற்புடையற்பாலனவான நிபந்தனைகளையும் பொறுப்பின் வரையறை களையும் அவர்கள் பயன்படுத்துவதற்கு, பொறுப்பின் வரையறைகள் இச்சமவாயத்திற்கிணங்க வேண்டப்படுவதனைத் தடுக்கும் ஒரு முறையில் அவர்கள் செயலாற்றினரென எண்பிக்கப்பட்டாலொழிய, உரித்துடை யோராதல் வேண்டும்.

### உறுப்புரை 44 – சேதவீடுகளின் கூட்டுச்சேர்க்கை

உண்மையாக ஏற்றிச் செல்பவரினால் புரியப்பட்ட ஏற்றிச் செல்லல் தொடர்பாக, அவ்வேற்றிச் செல்பவரிடமிருந்தும் ஒப்பந்தஞ்செய்யும் ஏற்றிச் செல்பவரிடமிருந்தும், தமது தொழிலின் நோக்கெல்லையினுள் செயலாற்று கின்ற அவர்களின் சேவையாளர்களிடமிருந்தும் முகவர்களிடமிருந்தும் அறவிடப்படற்பாலனவான தொகைகளின் கூட்டுமொத்தம், இச்சட்டத்தின் கீழ் ஒன்றில் ஒப்பந்தஞ்செய்யும் ஏற்றிச் செல்பவருக்கெதிராக அல்லது உண்மையாக ஏற்றிச் செல்பவருக்கெதிராக அளிக்கப்படக்கூடிய அதியுச்ச தொகையை விஞ்தலாகாது; ஆனால் குறிப்பிடப்பட்ட ஆட்களுள் எவரும், அவ்வாளுக்கு ஏற்புடையற்பாலதான வரையறைக்கு விஞ்சுதலானவொரு பணத்தொகைக்கு ஆளாதலாகாது.

### உறுப்புரை 45 – உரிமைக்கோரிக்கைகள் எவருக்கு முகவரியிட்டனுப்பப்படவேண்டுமென்பது

உண்மையாக ஏற்றிச்செல்பவரினால் புரியப்பட்ட ஏற்றிச்செல்லல் தொடர்பாகச் சேதவீடுகளுக்கான வழக்கொன்று, வழக்காளியின் விருப்புத்தெரிவின் பேரில், அவ்வேற்றிச்செல்பவருக்கெதிராக அல்லது ஒப்பந்தஞ்செய்யும் ஏற்றிச் செல்பவருக்கெதிராக அல்லது ஒன்றாக அல்லது தனித்தனியாக இருவருக்கெதிராகவும் கொணரப்படலாம். அவ்வேற்றிச் செல்பவர்களுள் ஒருவருக்கெதிராக மட்டுமே வழக்கானது கொணரப்படின், வழக்குநடவடிக்கைகளில் மற்றைய ஏற்றிச்செல்பவர் சேர்க்கப்படுவதனைத் தேவைப்படுத்துவதற்கான உரிமையை அவ்வேற்றிச் செல்பவர் கொண்டி ருத்தல் வேண்டும்; நடவடிக்கை முறையும் விளைவுகளும் வழக்கைக் கொண்ட சட்ட நீதிமன்றத்தினால் ஆளாக்கப்படுதல் வேண்டும்.

### உறுப்புரை 46 – மேலதிக நியாயாதிக்கம்

45 ஆம் உறுப்புரையில் உத்தேசிக்கப்பட்ட சேதவீடுகளுக்கான ஏதேனும் வழக்கு, வழக்காளியின் விருப்புத்தெரிவின்பேரில், அரசுத் திறத்தவர்களுள் ஒருவரின் ஆள்புலத்தில், 33 ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு, ஒன்றில் ஒப்பந்தஞ்செய்யும் ஏற்றிச்செல்பவருக்கெதிராக, எந்நீதிமன்றத்தில் வழக்கொன்று கொணரப்படலாமோ அந்நீதிமன்றத்தின் முன்னர் அல்லது உண்மையாக ஏற்றிச் செல்பவர் எவ்விடத்தில் அதன் வாழிடத்தை அல்லது பிரதான தொழிலிடத்தைக் கொண்டுள்ளதோ அவ்விடத்தில் நியாயாதிக்கங் கொண்ட நீதிமன்றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

### உறுப்புரை 47 – ஒப்பந்தஞ்சார் ஏற்பாடுகளின் செல்லுபடியற்றதன்மை

இவ்வத்தியாயத்தின்கீழான பொறுப்பிலிருந்து ஒப்பந்தஞ்செய்யும் ஏற்றிச் செல்பவரை அல்லது உண்மையாக ஏற்றிச் செல்பவரை விடுவிப்பதற்கு அல்லது இவ்வத்தியாயத்திற்கிணங்க ஏற்புடையற் பாலதாகவுள்ளதைவிடக் குறைவான வரையறையை நிர்ணயிப்பதற்கு இட்டுச்செல்கின்ற ஏதேனும்

ஒப்பந்தஞ்சார் ஏற்பாடு வெற்றானதும் வறிதானதுமாதல் வேண்டும். ஆனால் அத்தகைய ஏதேனும் ஏற்பாட்டின் வெற்றானதன்மை முழு ஒப்பந்தத்தினதும் வெற்றானதன்மையை உட்படுத்துவதில்லை; இது, இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு அமைந்ததாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

### உறுப்புரை 48 – ஒப்பந்தஞ்செய்யும் மற்றும் உண்மையாக ஏற்றிச்செல்பவர்களின் பரஸ்பரத் தொடர்புகள்

45 ஆம் உறுப்புரையில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, இவ்வத்தியாயத்திலுள்ளதெதுவும், காப்படை அல்லது நட்டோத்தரவாத உரிமையுட்பட, அவர்களுக்கிடையே ஏற்றிச்செல்பவர்களின் உரிமைகளையும் கடப்பாடுகளையும் பாதித்தலாகாது.

## அத்தியாயம் VI

### ஏனைய ஏற்பாடுகள்

### உறுப்புரை 49 – கட்டளைமுறையான ஏற்புடைமை

ஏற்றிச்செல்லல் ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள ஏதேனும் வாசகம் மற்றும் சேதம் ஏற்படுவதற்குமுன்னர் செய்துகொள்ளப்பட்ட எந்த விசேட உடன்படிக்கைகளின் மூலம் இச்சமவாயத்தினால் விதிக்கப்பட்ட விதிகளை மீறுவதற்குத் திறத்தவர்கள் கருதுகின்றனரோ அந்த விசேட உடன்படிக்கைகள் எல்லாம், ஏற்புடையதாக்கப்படவேண்டிய சட்டத்தை முடிபுசெய்வதன் மூலமாயினுஞ்சரி அல்லது நியாயாதிக்கம்பற்றிய விதிகளை மாற்றுவதன் மூலமாயினுஞ்சரி, வெற்றானவையும் வறிதானவையுமாதல் வேண்டும்.

### உறுப்புரை 50 – காப்புறுதி

அரசுத் திறத்தவர்கள், தமது ஏற்றிச் செல்பவர்களை, இச்சமவாயத்தின்கீழ் தமது பொறுப்பைக் காப்பீடு செய்கின்ற போதிய காப்புறுதியைப் பேணும்படி தேவைப்படுத்துதல் வேண்டும். ஏற்றிச் செல்பவரொருவர் எந்த அரசுத் திறத்தவரினுள் தொழிற்படுகின்றதோ அந்த அரசுத் திறத்தவரினால், இச்சமவாயத்தின் கீழான அதன் பொறுப்பைக் காப்பீடுசெய்கின்ற போதிய காப்புறுதியை அது பேணுகின்றதற்கான சான்றைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தப்படலாம்.

### உறுப்புரை 51 – அதிவிசேட சூழ்நிலைகளில் புரியப்பட்ட ஏற்றிச் செல்லல்

ஏற்றிச்செல்லலின் ஆவணப்படுத்துகை தொடர்பாக 3 முதல் 5, 7 மற்றும் 8 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகள், ஏற்றிச்செல்பவரொருவரின் தொழிலின் வழமையான நோக்கெல்லைக்கு வெளியே அதிவிசேட சூழ்நிலைகளில் புரியப்பட்ட ஏற்றிச்செல்லலின் விடயத்தில் ஏற்புடையனவாதலாகாது.

### உறுப்புரை 52 – நாட்கள் பற்றிய வரைவிலக்கணம்

“நாட்கள்” என்ற சொல்லமைப்பு இச்சமவாயத்தில் பயன்படுத்தப்படும்போது பஞ்சாங்க நாட்கள், வேலைநாட்களல்ல என்று பொருளாகும்.

## அத்தியாயம் VII

### இறுதி வாசகங்கள்

**உறுப்புரை 53 – கையொப்பமும், ஏற்புறுதியும், வலுவுக்கு வருதலும்**

*1.* இச்சமவாயம், 1999 மே 10 முதல் 28 வரை மொன்ட்றீலில் நடைபெற்ற வான் சட்டம் பற்றிய சர்வதேச மாநாட்டில் பங்குபற்றிய அரசுகளினால் கையொப்பமிடப்படுவதற்கு 1999 மே மாதத்தில் மொன்ட்றீலில் கிடைக்கக் கூடியதாகவிருத்தல் வேண்டும். 1999 மே 28 ஆந்தேதிக்குப் பின்னர், சமவாயமானது, அது இவ்வுறுப்புரையின் 6 ஆம் பந்திக்கிணங்க வலுவுக்கு வரும்வரை மொன்ட்றீலிலுள்ள சர்வதேசக் குடியியல் வான்செலவு ஒழுங்கமைப்பின் தலைமையலுவலகத்தில் கையொப்பத்துக்காக எல்லா அரசுகளுக்கும் கிடைக்கக்கூடியதாகவிருத்தல் வேண்டும்.

*2.* இச்சமவாயம், பிராந்தியப் பொருளாதார ஒன்றிணைப்பு ஒழுங்கமைப்புகளினால் கையொப்பமிடப்படுவதற்காக அதேபோன்று கிடைக்கக் கூடியதாதல் வேண்டும். இச்சமவாயத்தின் நோக்கத்துக்காக, "பிராந்தியப் பொருளாதார ஒன்றிணைப்பு ஒழுங்கமைப்பு" என்பது, கொடுக்கப்பட்ட வொரு பிராந்தியத்தின் இறைமையுள்ள அரசுகளைக் கொண்டமைந்ததும், இச் சமவாயத்தினால் ஆளப்பட்ட குறித்தசில கருமங்கள் தொடர்பில் தகுதி வாய்ந்ததும், இச்சமவாயத்தைக் கையொப்பமிடுவதற்கும் ஏற்றுமதி செய்வதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும், அங்கீகரிப்பதற்கும் அல்லது அதனோடு இணங்குவதற்கும் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது மான ஏதேனும் ஒழுங்கமைப்பு எனப் பொருளாகும். இச்சமவாயத்தில் "அரசுத் திறத்தவர்" அல்லது "அரசுத் திறத்தவர்கள்" பற்றிய குறிப்பீடு, 1 ஆம் உறுப்புரையின் 2 ஆம் பந்தியில், 3 ஆம் உறுப்புரையின் 1 (ஆ) என்னும் பந்தியில், 5 ஆம் உறுப்புரையின் (ஆ) என்னும் பந்தியில் 23, 33, 46 ஆம் உறுப்புரைகளில் மற்றும் 57 ஆம் உறுப்புரையின் (ஆ) என்னும் பந்தியில் தவிர வேறுவகையாக, ஒரு பிராந்தியப் பொருளாதார ஒன்றிணைப்பு ஒழுங்கமைப்புக்கு அதேபோன்று ஏற்புடையதாகின்றது. 24 ஆம் உறுப்புரையின் நோக்கத்துக்காக, "அரசுத் திறத்தவர்களுள் பெரும்பான்மையோர்" மற்றும் "அரசுத் திறத்தவர்களுள் மூன்றிலொரு பங்கினர்" பற்றிய குறிப்பீடுகள், ஒரு பிராந்தியப் பொருளாதார ஒன்றிணைப்பு ஒழுங்கமைப்புக்கு ஏற்புடையனவாதலாகாது.

*3.* இச்சமவாயம், அதனைக் கையொப்பமிட்டுள்ள அரசுகளினாலும் பிராந்தியப் பொருளாதார ஒன்றிணைப்பு ஒழுங்கமைப்புகளினாலும் ஏற்புறுதி செய்யப்படுவதற்கு அமைந்ததாதல் வேண்டும்.

*4.* இச்சமவாயத்தைக் கையொப்பமிடாத ஏதேனும் அரச அல்லது பிராந்தியப் பொருளாதார ஒன்றிணைப்பு ஒழுங்கமைப்பு அதனை எந்நேரத்திலும் ஏற்றுக்கொள்ளலாம், அங்கீகரிக்கலாம் அல்லது அதற்கு இணங்கலாம்.

5. ஏற்புறுதி, ஏற்றுக்கொள்ளல், அங்கீகார அல்லது இணங்குதற் சாதனங்கள் சர்வதேசக் குடியியல் வான் செலவு ஒழுங்கமைப்புடன் வைப்பிடப்படுதல் வேண்டும்; அது இத்தால் ஏமவைப்புக்காப்பாளர் எனப் பெயர் குறிப்பிடப்படுகின்றது.

6. இச்சமவாயம், ஏமவைப்புக்காப்பாளருடன் ஏற்றுமதி, ஏற்றுக் கொள்ளல், அங்கீகாரம் அல்லது இணங்குதல் என்பனபற்றிய முப்பதாவது சாதனம் வைப்பிடப்பட்ட தேதியை அடுத்துவரும் அறுபதாவது நாளன்று அத்தகைய சாதனத்தை வைப்பிலிட்டுள்ள அரசுகளுக்கிடையே வலுவுக்கு வருதல் வேண்டும். ஒரு பிராந்தியப் பொருளாதார ஒன்றிணைப்பு ஒழுங் கமைப்பினால் வைப்பிலிடப்பட்ட சாதனம் இப்பந்தியின் நோக்கத்துக்காகக் கணக்கிடப்படுதலாகாது.

7. ஏனைய அரசுகளுக்கும் ஏனைய பிராந்தியப் பொருளாதார ஒன்றிணைப்பு ஒழுங்கமைப்புகளுக்கும், இச்சமவாயம், ஏற்புறுதி, ஏற்றுக்கொள்ளல், அங்கீகாரம் அல்லது இணங்குதல் என்பன பற்றிய சாதனம் வைப்பிடப்பட்ட தேதியை அடுத்துவரும் அறுபதாவது நாளன்று பயனுறுவதாதல் வேண்டும்.

8. ஏமவைப்புக்காப்பாளர் பின்வருவனபற்றி எல்லாக் கையொப்ப மிடுநர்களுக்கும் அரசுத் திறத்தவர்களுக்கும் உடனடியாக அறிவித்தல் வேண்டும்:-

(அ) இச்சமவாயத்தின் ஒவ்வொரு கையொப்பமும் அதன் தேதியும்;

(ஆ) ஏற்றுமதி, ஏற்றுக்கொள்ளல், அங்கீகாரம் அல்லது இணங்குதல் என்பன பற்றிய ஒவ்வொரு வைப்பிடுதலும்/அதன் தேதியும்;

(இ) இச்சமவாயம் வலுவுக்கு வரும் தேதி;

(ஈ) இச்சமவாயத்தின்கீழ் நிலைநாட்டப்பட்ட பொறுப்பின் வரையறைகளினது ஏதேனும் பரிசீலனை வலுவுக்கு வருகின்ற தேதி;

(உ) 54 ஆம் உறுப்புரையின்கீழான ஏதேனும் கண்டனம்.

**உறுப்புரை 54 - இசைவுக்கான மறுப்பு**

1. ஏமவைப்புக்காப்பாளருக்கு எழுத்திலான அறிவிப்பின்மூலம் எவரேனும் அரசுத் திறத்தவர் இச்சமவாயத்துக்கு இசைவுக்கான மறுப்பைத் தெரிவிக்கலாம்.

2. எத்தேதியன்று ஏமவைப்புக்காப்பாளரினால் அறிவிப்பு பெறப்படு கின்றதோ அத்தேதியை அடுத்துவரும் நூற்றியெண்பதாவது நாளன்று இசைவுக்கான மறுப்பு பயனுறுதல் வேண்டும்.

**உறுப்புரை 55 – ஏனைய வார்சோ சமவாயச் சாதனங்களுடனான தொடர்புமுறை**

இச்சமவாயம், சர்வதேச வானூர்திமூலம் ஏற்றிச் செல்லலுக்கு ஏற்புடையனவான எவையேனும் விதிகளிலும் மேலோங்கிநிற்றல் வேண்டும்:

1. இச்சமவாயத்துக்கான அரசுத் திறத்தவர்கள் பின்வருவனவற்றுக்குப் பொதுவாகத் திறத்தவராக விருப்பதன் பயனைக் கொண்டு அவ்வரசுக்களிடையே:

(அ) (இதனகத்துப்பின்னர் வார்சோ சமவாயம் எனவழைக்கப்படும்) 1929 ஒற்றோபர் 12 ஆந்தேதியன்று வார்சோவில் கையொப்பமிடப்பட்ட சர்வதேச வானூர்திமூலம் ஏற்றிச்செல்லல் தொடர்பான குறித்தசில விதிகளை ஒன்றாக்குவதற்கான சமவாயம்;

(ஆ) (இதனகத்துப்பின்னர் ஹேக் வரைவேடு எனவழைக்கப்படும்) 1955 செத்தெம்பர் 28 ஆந்தேதியன்று ஹேக்கில் ஆக்கப்பட்ட, 1929 ஒற்றோபர் 12 ஆந்தேதியன்று வார்சோவில் கையொப்பமிடப்பட்ட சர்வதேச வான்மூலம் ஏற்றிச்செல்லல் தொடர்பான குறித்தசில விதிகளை ஒன்றாக்குவதற்கான சமவாயத்தைத் திருத்துவதற்கான வரைவேடு;

(இ) (இதனகத்துப்பின்னர் கௌடலஜாரா சமவாயம் எனவழைக்கப்படும்) 1961 செத்தெம்பர் 18 ஆந்தேதியன்று கௌடலஜாராவில் கையொப்பமிடப்பட்ட, ஒப்பந்தஞ்செய்யும் ஏற்றிச்செல்பவர் தவிர்ந்த வேறு ஆளொருவரினால் புரியப்பட்ட சர்வதேச வானூர்திமூலம் ஏற்றிச் செல்லல் தொடர்பான குறித்தசில விதிகளை ஒன்றாக்குவதற்காக, வார்சோ சமவாயத்துக்குக் குறைநிரப்பியாகவுள்ள சமவாயம்;

(ஈ) (இதனகத்துப்பின்னர் கௌதமாலா நகர் வரைவேடு எனவழைக்கப்படும்) 1971 மார்ச்சு 8 ஆந்தேதியன்று கௌதமாலா நகரில் கையொப்பமிடப்பட்ட, 1955 செத்தெம்பர் 28 ஆந் தேதியன்று ஹேக்கில் ஆக்கப்பட்ட வரைவேட்டினால் திருத்தப்பட்டவாறான 1929 ஒற்றோபர் 12 ஆந் தேதியன்று வார்சோவில் கையொப்பமிடப்பட்ட சர்வதேச வானூர்திமூலம் ஏற்றிச் செல்லல் தொடர்பான குறித்தசில விதிகளை ஒன்றாக்குவதற்காகச் சமவாயத்தைத் திருத்துவதற்கான வரைவேடு;

(உ) (இதனகத்துப்பின்னர் மொன்ட்ரீஸ் வரைவேடுகள் எனவழைக்கப்படும்) 1975 செத்தெம்பர் 25 ஆந் தேதியன்று மொன்ட்றீலிஸ் கையொப்பமிடப்பட்ட, ஹேக் வரைவேடு மற்றும் கௌதமாலா நகர் வரைவேடு ஆகிய இரண்டினாலும்

திருத்தப்பட்டவாறானதும், ஹேக் வரைவேட்டினால் அல்லது வார்சோ சமவாயத்தினால் திருத்தப்பட்டவாறானதும், வார்சோ சமவாயத்தைத் திருத்துவதற்கானதுமான மேலதிக வரைவேடு இல 1 முதல் 3 மற்றும் மொன்ட்றீல் வரைவேடு இல. 4; அல்லது

2. மேலே (அ) முதல் (உ) வரையிலான உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட சாதனங்களுள் ஒன்றுக்கோ அல்லது பலவற்றுக்கோ இச் சமவாயத்துக்கான எவரேனும் தனி அரசுத் திறத்தவர் திறத்தவராக விருப்பதன் பயனைக்கொண்டு அத்திறத்தவரின் ஆள்புலத்தினுள்.

**உறுப்புரை 56 – ஒன்றுக்கு மேற்பட்ட சட்ட முறைமைகளுடனான அரசுகள்**

1. இச்சமவாயத்தில் கையாளப்பட்ட கருமங்கள் தொடர்பாக வெவ்வேறு சட்டமுறைமைகள் ஏற்புடையற்பாலனவாகவுள்ள இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட ஆள்புலக்கூறுகளை அரசொன்று கொண்டிருப்பின், அது, கையொப்பமிடும், ஏற்புறுதி செய்யும், ஏற்றுக்கொள்ளும், அங்கீகரிக்கும் அல்லது இணங்கும் நேரத்தில், இச்சமவாயம் அதன் எல்லா ஆள்புலக் கூறுகளுக்கும் அல்லது அவற்றுள் ஒன்றுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட வற்றுக்கு மட்டும் நீடித்தல் வேண்டுமென வெளிப்படுத்தலாமென்பதுடன், இன்னொரு வெளிப்படுத்துகையை எந்நேரத்திலும் சமர்ப்பிப்பதன்மூலம் இவ் வெளிப்படுத்துகையைத் திரிபுபடுத்தலாம்.

2. அத்தகைய ஏதேனும் வெளிப்படுத்துகை ஏமவைப்புக்காப்பாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சமவாயம் ஏற்புடையதாகவுள்ள ஆள்புலக் கூறுகளை வெளிப்படையாகக் கூறுதலும் வேண்டும்.

3. அத்தகையவொரு வெளிப்படுத்துகையைச் செய்துள்ள அரசுத் திறத்தவரொருவர் தொடர்பாக:

(அ) 23 ஆம் உறுப்புரையில் “தேசிய நாணயம்” பற்றிய குறிப்பீடுகள், அவ்வரசின் இயைபான ஆள்புலக் கூறின் நாணயத்தைக் குறிப்பீடு செய்வனவாகப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) 28 ஆம் உறுப்புரையில் “தேசிய சட்டம்” பற்றிய குறிப்பீடு, அவ்வரசின் இயைபான ஆள்புலக் கூறின் சட்டத்தைக் குறிப்பீடு செய்வதாகப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**உறுப்புரை 57 – தனிப்பற்றொதுக்கீடுகள்**

அரசுத் திறத்தவரொருவர், எந்நேரத்திலும், ஏமவைப்புக்காப்பாளருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட அறிவிப்பொன்றின்மூலம் இச்சமவாயம் பின்

வருவனவற்றுக்கு ஏற்புடையதாதலாகாதென வெளிப்படுத்தலாம் என்பதைத் தவிர, இச் சமவாயத்துக்குத் தனிப்பற்றொதுக்கீடு எதுவும் செய்யப்படலாகாது:

(அ) இறைமையுள்ள அரசொன்றாக அதன் பணிகளும் கடமைகளும் தொடர்பில் வர்த்தகஞ்சாரா நோக்கங்களுக்காக அவ்வரசுத் திறத்தவரினால் நேரடியாகப் புரியப்பட்டுத் தொழிற்படுத்தப் பட்ட சர்வதேச வானூர்திமூலம் ஏற்றிச்செல்லல், அத்துடன்/ அல்லது

(ஆ) அவ்வரசுத் திறத்தவரில் பதிவுசெய்யப்பட்ட அல்லது அவ்வரசுத் திறத்தவரினால் குத்தகைக்கு கொடுக்கப்பட்ட வானூர்தியில் அதன் இராணுவ அதிகாரிகளுக்காக ஆட்களை, சரக்கை மற்றும் பொதியை ஏற்றிச் செல்லல்; அதன் முழுக் கொள்ளளவும் அத்தகைய அதிகாரிகளினால் அல்லது அவர்களின் சார்பில் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இதற்கத்தாட்சியாக கீழே கையொப்பமிட்டுள்ள முழுவுரிமைப் பேற்றுத்தூதர்கள், உரியமுறையில் அதிகாரமளிக்கபட்டிருந்து, இச்சமவாயத் தைக் கையொப்பமிட்டுள்ளனர்.

ஆங்கில, அரபு, சீன, பிரெஞ்சு, ரூசிய மற்றும் ஸ்பானிய மொழிகளில் (எல்லா உரைகளும் சமமாக மெய்யானவை) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதாம் ஆண்டு மே மாதம் 28 ஆம் நாளன்று மொன்ட்றீலில் ஆக்கப்பட்டது. இச்சமவாயம் சர்வதேசக் குடியியல் வான்செலவு ஒழுங்கமைப்பின் சுவடிக்கூடத்தில் வைப்பிடப்பட்டதாகத் தொடர்ந்திருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள், இச்சமவாயத்துக்கான எல்லா அரசுத் திறத்தவர்களுக்கும், வார்சோ சமவாயம், ஹேக் வரைவேடு, கௌதலஜாரா சமவாயம், கௌதமாலா நகர் வரைவேடு மற்றும் மொன்ட்றீல் வரைவேடு என்பவற்றுக் கான எல்லா அரசுத் திறத்தவர்களுக்கும் ஏமவைப்புக்காப்பாளரினால் அனுப்பப்படுதலும் வேண்டும்.